"தமிழ்பேசும் மக்களின் தாயகமாக

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 பங்குனி 13 றஜப 26 இதழ் 43

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 27-3-1987

# 'ஈழத்தை' இந்தியா ஏற்று பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்"

## — ஈரோஸ் பரா

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ் பேசும் மக்களின் தாயகமாக இந்தியா 'ஈழத்தை' ஏற்று பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு சிறிலங்காவில் புகுந்திருக்கும் அந்நிய சக்திகளை இனக்கண்டு ஐ. நா. சபையில் ஈழப் பிரச்னையை எடுத்து எமது போராட்டத்தை நியாயப் படுத்தி, சகல விதமான ஒடுக்கு முறைகளையும் முறியடிக்க முன்னெடுக்கும் ஈழப் போராட்டத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும்.''

ஈழவர் முன்னணியினரால் யாழ் நகரில் நேற்றுக்காலை நடாத்தப்பட்ட பேரணியின் இறுதியில் கச்சேரியடியில் நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஈழப் புரட்சி அமைப்பின் யாழ்

5-ம் பக்க பார்க்க)

## ஈழவர் முன்னணி நடத்திய ஆர்ப்பாட்ட பேரணி

யாழ்ப்பாணம், வெள்ளி.

ஈழப்போராட்டத்தை இந்திய அரசு அங்கீகரிக்கக் கோரியும் ஆயுதம் தாங்கிய போராளிகளின் அமைப்புக்களே தமிழ் பேசும் மக்களின் நியாயமான அபிலாஷைகளைப் பிரதிபலிப்பவர்கள் என்பதை இந்தியா உணர்ந்து கொள்ள வேண்டும்என்று கோரியும் ஈழவர்முன்னணியினரால் நேற்று நடாத்தப்பட்ட ஆர்பாட்ட பேரணியில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கலந்து கொண்டார்கள்.

யாழ். நாச்சிமார் கோவில் முன்றலில் இருந்து காலை

(-8ம் பக்கம் பார்க்க)



ஈழப்போராட்டத்தை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்மெனக் கோரி, நாச்சிமார் கோவிலடியிலிருந்து, யாழ்.கச்சேரிவரை ஈழவர் முன்னணி நடத்திய ஆர்ப்பாட்ட பேரணியில் பங்குபற்றியோரில் ஒரு பகுதியினரேயே படத்தில் காண்கிறீர்கள் (படம் 'தேவா'

# யுத்தக்கைதிகளை பார்வையிட, பத்திரிகை மூலம் தளபதி கிட்டுவிடம் வவனியா பிக்கு அனுமதி கோருகிறார்

(வவனியா நிருபர்)

யாழ். பொலிஸ் விடுதிமுகாம்மீது கடந்த திங்கட்கிழமை அதிகாலை அதிரடித் தாக்குதல் நடத்தி, புலிகளினால் சிறைப்பிடிக்கப்பட்ட எட்டு படையினரையும், அவர்களது உறவினர்களுடனும் தென்பகுதி சமாதானத்தை விரும்பும் பிரமுகர்களுடனும் வந்து பார்ப்பதற்கு புலிகளின் குடாநாட்டுத் தளபதி திரு. கிட்டுவிடம் வவனியா பௌத்தகுரு சியம்பலகஸ்வல விமலசார தேரோ பத்திரிகை வாயிலாக அனுமதி கோருகின்றார்.

(5-ம்பக்கம் பார்க்க)

## இந்தியாவின் கோரிக்கையை இலங்கை அனுசரிக்காதது வருந்தத்தக்கது

### டிக்ஷிற் மூலம் ஜனாதிபதிக்கு ராஜீவ் செய்தி

(புதுடில்லி)

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தைமூலம் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண இலங்கை அரசு முன்வரவேண்டுமென்று முன்னாள் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. தினேஷ் சிங் மூல இந்தியா விடுத்திருந்த கோரிக்கையை இலங்கை அனுசரிக்காதது வருந்தத் தக்கது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இலங்கைக்கான இந்திய தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் மூலம் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ள செய்தியொன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்படி செய்தி ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் நேற்று மாலை கையளிக்கப்பட்டது.

இதேவேளை இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுடன்

(8-ம் பக்கம் பார்க்க)

## படையினர் நகை கேட்க வில்லையாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

''வங்கி அதிகாரிகளிடம் நகை கேட்ட படையினர்'' என்ற தலைப்பில் கடந்த 21ம் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த செய்தி தவறு என தெரியவருகின்றது.

பலாலி ராணுவ முகாமில் மக்கள் வங்கி அதிகாரிகள் நகைப் பொதிகளைப் பிரிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த

(5-ம் பக்கம் பார்க்க)

## திருமண அழைப்பு

மணமகன்: செல்வன் தேவலிங்கம்
(லங்கா சிமென்ற் லிமிரெட்)
முள்ளியவளை சி. குட்டித்தம்பி தம்பதிகளின் புத்திரன்

மணமகள்: செல்வி வசந்தினி
(ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை - பேராதனை)
குரும்பசிட்டி திருமதி புராசக்தி நவரத்தினம் அவர்களின் புத்திரி.

காலம்: 1987-03-30-ம் திகதி திங்கட்கிழமை பி.ப 12-06 தொடக்கம் 1.02 வரையுள்ள சுபவேளை.

இடம்: வவனியா கந்தசாமி கோவில் வீதியிலுள்ள மணமகள் இல்லத்தில்.

அழைப்பு:
கு. அருணாசலம்,
167/2, கந்தசாமி கோவில் வீதி,
வவனியா.

[சி 8236]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

20 அடி உயர குரோமியம் பூசிய புதிய கொடிஸ்தம்பம் விற்பனைக்குண்டு. பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். சி-8204

கொக்குவில் பிரதான தபால் கந்தோருக்கருகாமையில் காங்கேசன்துறை வீதியில் நிலப்பரப்பு 2½ விற்பனைக்குண்டு. பி. ப. 4—6 வரை சந்திக்கவும். தொடர்பு: மா. தியாகராசா, சட்டத்தரணி, ஆனைகோட்டை. [சி 8191

ஜேவீசி, நஷனல் கம்பனிகளின் 20'' கலர் தொலைக்காட்சி பெட்டிகளும் மின்சார மோட்டர்வாளும் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு: ஸ்ஞேக்காவீடியோ மன்சில், திருநெல்வேலிச்சந்தி. சி 8195

கொக்குவில் மேற்கு பிடாரி கோவிலடியில் ஆடியபாதம் ரோட் முகப்புடைய காணி நிலப்பரப்பு 5½ யும் குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதியில் வராகிகோவில் ஒழுங்கை முகப்பில் நில - பரப்பு 3-ம் விற்பனைக்குண்டு பி. ப. 4-6 வரை சந்திக்கலாம். தொடர்பு: மா. தியாகராசா, சட்டத்தரணி, ஆனைக்கோட்டை. சி-8192

புரோயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. கிலோ 42 /- ஆ. சிவராசா, ''பூபதி'' 6/2, கன்ஞுதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம். சி-8220

J. V. C. G. X. N. 70E வீடியோ கமரா, National ரைற்றில் மிக்ஷர், National S. I. வீடியோ மிக்ஷர் விற்பனைக்குண்டு. பி. ப. 4 மணி முதல் பார்வையிடலாம். 45, பழம்ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். [சி8179]

திரு வழிபாட்டுக்குத்வேவையான திருமணித்தியாலம், சிலுவைப்பாதை, பசாம் புத்தகங்களும், புதிய உலகம் சஞ்சிகையும், பாதுகாவலன் பத்திரிகையும், மோட்சப்பாதையும் விற்பனைக்குண்டு. விற்பனையாளர்: எஸ். ஜே. எம். துரைசிங்கம், புனித சிந்தாத்திரை மாதா, செபமாலை ஸ்ரோர்ஸ், 140, சுருவில் வீதி, கரம்பொன், ஊர்காவற்றுறை. சி-8207

## தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மின்சாரம் நீர் முதலிய வசதிகளோடு நான்கு அறைகளுக்குக் குறையாத வீடு வாடகைக்குத் தேவை. சி-8154 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். சி-8154

## பயிற்சி

Refrigeration & Air Conditioning டிராப்மென்சிப்-ரி வி அன்ட் ரேடியோ எலக்ரிக்கல்வயரிங் தமிழ், ஆங்கிலம் தட்டச்சு, சுருக்கெழுத்து, IAB Foundation ஆகிய பயிற்சி நெறிகள் 29 - 03 - 87 ல் ஆரம்பமாகவுள்ளன. சேர விரும்புவர்கள் நிறுவனத்துடன் தொடர்பு கொள்க. Institute of Technical Studies, வட்டுக்கோட்டை. சி-8205

## வகுப்புக்கள்

A/L 89,88 கலை, வர்த்தக வகுப்புகள்; O/L 87 பகல்நேர வகுப்பு 21-03-1987. ஆரம்பமாகியது. மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. [சி-8068]

Spokcn English எஸ். பி. ஐயர் பட்டதாரியானவர்களுக்கும், சர்வகலாசாலைப் புகுமுகச் சித்திபெற்றவர்களுக்கும். ஆரம்பம்: 31- 3- 87. நேரம் 9—10 செவ்வாய், வியாழன். 12, வைமன் வீதி, நல்லூர். [சி-8183]

ஒப்பனைக்கலையும், தலை அலங்கார பயிற்சி வகுப்புக்களும் பாடத்திட்டத்துடன் பயிற்சிநெறியும் (Basic Make-up and Hair Dressing Classes with Practical and theory) சித்திரை மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கிறன. விபரங்களுக்கு: திருமதி யோகினி, 71, நாயன்மார் வீதி (கச்சேரி நல்லூர் வீதியில் பிரிந்து செல்லும் வீதி), நல்லூர், யாழ்ப்பாணம். [சி- 8190]

A/L 88, 89 கலை, வர்த்தகம், விஞ்ஞானம் O/L பகல் நேர வகுப்புக்கள், Spoken English Classதமிழ், ஆங்கிலம், தட்டச்சு, சுருக்கெழுத்து. சித்திரை 16ம் திகதி வரை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும். பிறிலியன் அக்கடமி, நெல்லியடி, சி-8211

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் அக்ஷய வருடம் பங்குனி மாதம் 16-ம் நாள் [30-03-87] திங்கட்கிழமை பகல் 11-30 மணி தொடக்கம் 1-02 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்,

| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
|---|---|
| **சோமசேகரன்** | **கமலநாயகி** |
| கச்சேரி, கிளிநொச்சி. | மக்கள்வங்கி, யாழ்ப்பாணம் |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் அருளால் மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு குடும்பசமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

திருமதி மு. பேரம்பலம்
வட்டுக்கோட்டை.

திரு. த. சின்னத்தம்பி
[இளைப்பாறிய கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியரும்]
பாரியாரும்.

31/19, சபாபதி வீதி,
தலையாளி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(சி-8200)

## சேவை

யூனிபோ [Unnifo] உருக்கு அலுமாரிகள், மேசைகள் மற்றும் ஆபீஸ்/ வீட்டுத் தளபாடங்களை வாடிக்கையாளர்கள் தற்போது உரும்பராய் வேம்பன் வீதியில் உள்ள யூனிபோ தொழிற்சாலையில் நேரடியாகவே பெற்றுக் பெற்றுக் கொள்ளலாம். விசேட ஆடர்களும் ஏற்கப்படுகின்றன. பொதுமுகாமையாளர், யூனிபோ நிறுவனம் (Unnifo), வேம்பன் வீதி, உரும்பராய். (சி: 7614)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி சண்முகம் மகாதேவி

மண்ணுலகம்: 03-07-1934
விண்ணுலகம்: 16-02-1987

அன்னையே எங்கள் அன்பின் திருவுருவே நீ பாலூட்டித் தாலாட்டி வளர்த்த உன் செல்வங்கள் ஐந்தில் ஒருவனும் சங்கர்தனை பிரியமுடன் தேடியே வந்திட்டால். ஓடியேநீயும்வந்திடுவாய். பரிவுடன் அறுசுவை உணவும் பக்குவமாய் தந்திடுவாய். அறிவுரை நல்கி பள்ளிக்கு அனுப்பிவைப்பாய் எம் உள்ளமும் உடலும்வளம்பெறவைத்தாய் உத்தமியே எங்கள் அன்புத்தெய்வமே பண்பின் உறைவிடமே பாசத்தின் பிறப்பிடமே. நல்வாழ்வளித்த நின் பாதமலருக்கு எம் இதயமலரால் அர்ச்சனை செய்கிறோம்.

சங்கர், நண்பர்கள்.

அன்னாரின் இல்லத்தில் நடைபெற்ற இறுதிக்கிரியையில் கலந்துகொண்டவர்களுக்கும் வீட்டுக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எம்நன்றிகள்.

இவரின் பிரிவால்துயறும்:
கணவன், பிள்ளைகள், சகோதர-சகோதரிகள். [சி-8224]

## தேவை

ரூன்ஸ்போர்மர்ஸ் (Transformers) மக்னற்றோ [Magneto Coils) றீவைன்டிங் செய்ய அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை. நேரில் வரவும். Peters Rewinding Works, 9, Jubilee Bazaar, Jaffna. சி-8225

## 3-ம் வருட நினைவஞ்சலி



அமரர்
R. A. பிரான்சிஸ் றணசிங்கே
(Police Sergeant P S. 3603 பொலிஸ் சார்ஜன்)
ஆண்டவன் படைப்பு: 21-10-1950
அநியாய அழிப்பு: 27-03-1984

வாழவந்த தெய்வம் வானம் சென்றதேனோ மண்ணில் வாழ்ந்தோரெல்லாம் மடிவதுநிஜம். ஆனாலும் இளவயதில் எங்களை விட்டுப்பிரிந்த அன்புத் தெய்வமே! எங்களைத் தவிக்கவிட்டு நீர் தனிவழி சென்றுவிட்டீரே பப்பாவே! நீர் சென்ற வழிபார்த்து செயலிழந்து நிற்கிறோம். கடமைக்குச்சென்ற உங்களை பாதையில் ஏற்றிய பகைவர்கள் பாவிகளாகட்டும். மறைந்தும் மறையாமல் எம் இதயங்களில் குடிகொண்டிருக்கும் எம் தலைவா! உங்கள் பிரிவால் துயருறும் எமக்கு, ஆறுதல்தான் எக்காலமோ? உங்கள் பிரிவால் உளம் உருகும் அன்பு மனைவி மனம் கலங்கி ஏங்கும் அருமைப் பிள்ளைகளின் கண்ணீர் அஞ்சலி. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறை யேசுவை இறைஞ்சுகிறோம். இவரின் ஆன்ம சாந்திக்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் துக்கத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அன்பு மனைவி, பிள்ளைகள், அருமைத் தாய், தங்கை, மைத்துனர்மார், மைத்துனிமார், உற்றார், உறவினர். (சி 8222)

## A/L 89 பிரிவு - II

(விஞ்ஞான பாடங்கள்)

### நாளை ஆரம்பம்:

(சனிக்கிழமை காலை 7-30 மணி)

(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)

| | | |
|---|---|---|
| 7-30 — 8-30 | — | விலங்கியல் |
| 8-30 — 9-30 | — | தாவரவியல் |
| 9-30 — 10-30 | — | பௌதிகவியல் |
| 10-30 — 11-30 | — | இரசாயனவியல் |
| 11-30 — 1-30 | — | தூயபிரயோககணிதம் |

குறிப்பு: பிரிவு I க்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

விபரங்கட்கு:

**New Master Institute**
B. M. C Lane, Jaffna.

(எ-3600)

## ஷெல் தாக்குதல் ஒரு பெண் காயம் பல வீடுகள் சேதம்

வல்வெட்டித்துறை, வியா

தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல்கள் கம்பர்மலைப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் பல வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளதுடன் ஒரு பெண் பலத்த காயமும் அடைந்துள்ளார்.

இச் சம்பவத்தின்போது இரண்டு ஆடுகள் ஷெல்லுக்குப் பலியாகியுள்ளன.

நேற்று முன்தினம் அதிகாலை மூன்று மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தின் போது கம்பர்மலை பாரதி

(7-ம் பக்கம் பார்க்க)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



எமது இல்லத்தரசி
திருமதி
கனகரத்தினம்
நல்லம்மா

தோற்றம்: 14-01-1918
மறைவு; 27-03-1984

ஆண்டு மூன்று ஆனாலும் உங்களை நாமெல்லாம் அனவரதமும்நினைந்துருகி வாடுகிறோம்-தங்களது ஆசையால் எப்போதும் அழுதழுது வருந்துகிறோம் ஆதரவு எமக்கு நல்க நீர் வருவதெப்போது? கணவன் கதிகலங்க, கன்னிமகள் கதறியழ, கண்ணுற்றார்அனைவருமே கண்ணீருக-எங்கள் கண்ணின் மணிபோன்ற எமது அரிய தாயாரே! கணப்பொழுது தானும் நும்வருகை சாத்தியமா? அடிசிற்கு இனியாளே அன்புடைய எமதன்னை படிசொற் கடவாத பாவையே-சந்ததமும் உள்ளொன்றும் வைக்காது உரத்துமேநீர்பேசி மெள்ளவே எமைவிட்டுச் சொல்லாது போனீரே? பேரன்புடைய தாயே! நீங்கள் பிறந்தகத்துக்கும் புகுந்தகத்துக்கும் நற்புகழைத் தேடிவைத்தீர்கள். உங்களது கைங்கரியங்கள் அனைத்தும் எம்மகத்தில் ஆணித்தரமாகவே வேரூன்றி இன்றும் நிலைபெற்றுள்ளது. அன்றியும் நுமது அடிசிலைஅன்று சுவைத்தோர் இன்று இங்கு அச்சுவைஇல்லையே என ஏங்குகின்றனர். தங்களது இன்முகத்தை நாம் மீண்டும் எப்போது காண்பது என ஏங்கி நிற்பதோடல்லாமல் தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை யாம் அனைவரும் ஒருங்கே வேண்டிநிற்கும்:

கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள் உறவினர்.

இல. 12/3, சந்தானமாதா கோயில் வீதி, பாண்டியதாழ்வு, யாழ்ப்பாணம். (சி 8217)

# சாட்டிலிருந்து லிபிய படைகள் வாபஸ்!

பாரிஸ், மார்ச் 26

**வடஆபிரிக்க நாடான சாட்டிலிருந்து லிபிய படைகள் வாபஸ்பெறத் தொடங்கியுள்ளன. கடந்த ஞாயிற்றுக்கிழமை சாட்டின் வடகிழக்குப் பிரதேசமான ப யலாஜோவிலுள்ள வாடிடூம் என்ற லிபிய தளத்தின்மீது சாட்படைகள் நடத்திய தாக்குதலையடுத்தே இந்த வாபஸ் இடம்பெறுகின்றது.**

உலகச் செய்திகள்

வாடிடூம் தாக்குதலில் சுமார் 1200 லிபியப் படைகள் கொல்லப்பட்டன. 400 பேர் வரை ை துசெய்யப்பட்டனர். அத்துடன் 11 பொம்பர் விமானங்கள் உட்பட லிபியாவின் பல இராணுவ சாதனங்கள் கடற்படைகளால் கைப்பற்றப்பட்டன.

இத் தாக்குதலைத் தொடர்ந்தே லிபியப் படைகள் சாட்டிலிருந்தும் விலக்கிக்கொள்ளப்படுகின்றன.

சா' ஒரு முன்னுள் பிரெஞ்சு காலனித்துவ நாடாகும். பிரெஞ்சு நாட டின் ஆதரவுடனேயே ஹாப்ரே சாட்டை நிர்வகித்துவருகின்ருர்.

ஆயினும் அயல்நாடான லிபியா சாட்டின்மீது தொடர்ச்சியான படையெடுப்புக்களை நடத்தியதுடன் சாட் பிரதேசத்துதுக்குள் தளங்கள சிலவற்றையும் கொண்டிருந்தது.

சாட் அதிபர் ஹாப்ரேயின் பிறப்பிடமான பாயலாஜோ நகரில் இருந்ததே லிபியாவின் வாடிடூம் தளமாகும். இத்தளமே தற்போது சாட் படைகளிடம் வீழ்ச்சியடைந்துள்ளது.

1983ம் ஆண்டுக்குப் பின்னரே இத் தளத்தில் லிபியப் படைகளின் பலம் அதிகரிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சாட்டிலிருந்து வெளியேறும் லிபியப்ப டகள் அங்கிருந்த தமது எண் ணெய்க் குதங்களையு' வெடிமருந்துக் களஞ்சியங்களையும் நாசப்படுத்திச் சென்றதாகவும் பிரெஞ்சு வானெலி அறிவித்தது.

---

## மேற்கு வங்கம், கேரளாவில்

# இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி அமைப்பு!

புதுடில்லி, மார்ச் 26

கேரள மாநிலத்திலும், மேற்கு வங்காளத்திலும் இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆட்சிஅமைத்துள்ளன.

கேரளத்தில் இந்திய மார்க்ஸிஸ்ட் கட்சி தலைமையில் போட்டியிட்ட இடதுசாரி முன்னணி பெரும்பான்மை பலத்தைப் பெர்றது,

இதனையடுத்து இந்திப மார்க்ஸிஸ்ட் கட்சியின் தலைவரான திரு ஈ. கே. நாயனுர் (வயது 68) கேரள மாநிலத்தின் புதிய சட்ட சபை முதலமைச்சராக நேற்று தெரிவு செய்யப்பட்டார். இவர் இரண்டாவது தடவையாக முதலமைச்சராகியுள்ளார்.

இதேவேளை மேற்கு வங்காளத்திலும்இந்தியமார்க்ஸிஸ்ட் கட்சி தலைமையிலான கூட்டுக் கட்சிகள் பெரும் வெற்றி பெற்றுள்ளன.

மேற்கு வங்காள முதலமைச்சர் திரு. ஜோதிபாசு தமது தொகுதியில் மீண்டும் பெரு வெற்றி பெற்றுள்ளார். இவர் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட இந். காங்கிரஸ் வேட்பாளரை 15,804 வா'குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். ஜோதிபாசு தலைமையில் மீண்டும் மே. வங்க அரசு சட்ட சபை அமைச்சரவையை அமைத்துள்ளது.

இதேவேளை ஜம்மு காஷ்மீரில் தேசிய மா'நாட்டுக்கட்சி, இந்திரா காங்கிரஸ் கட்சி ஆகியன கூட்டாக வெற்றி பெற்றுள்ளன. இதுவரை வெளியாகியுள்ள 54 முடிவுகளில் 30 இடங்களை தேசிய மாநாட்டுக்கட்சி பெற்றுள்ளது 24 இடங்களை இ. காங்கிரஸ் பெற்றுள்ளது,

---

## சென்னையில் தீவிபத்து

# 110 குடிசைகள் கருகி நாசம் 200 பேர் வீடிழப்பு!

சென்னை, மார்ச் 26

சென்னைக்கருகே சுமார் 110 குடிசைகள் தீப்பிடித்து நாசமாகின. இதனுல் சுமார் 200 குடும்பங்கள் வீடு வாசல்களை இழக்கநேரிட்டது

இத் தீ பத்தையடுத்து 8தீயணைக்கும் இயந்திரங்கள் ஸ்தலத்துக்கு விரைந்தன. தீயைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர அவை ஒரு மணி நேரத்துக்கு மேலாக போராடின.

இத் தீபத்தில் சுமார் ஒரு லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இவ் விபத்துக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

---

## சீனுவிடம் போர்த்துக்கேய காலனித்துவ தீவு மக்காயோ

# கையளிப்பு!

பீக்கிங், மார்ச் 26

தென்சீனப் பகுதியிலிருந்த போர்த்துக்கேய காலனித்துவ பிரதேசமான மக்காயோ சீனுவிடம் சமஷ்டி அடிப்படையில் கையளிக்கப்படவுள்ளது. 1999ம் ஆண்டு இந்த 6 சதுர மைல் பிரதேசம் சீனுவிடம் போர்த்துக்கல்லினுல் வழங்கப்படும்.

இதற்கான ஒப்பந்தத்தில் சீன, போர்த்துக்கல் அதிகாரிகள் இரு தினங்களுக்குமுன்னர் கைச்சாத்திட்டனா.

1999 ் ஆண்டு இச் சிறிய தீவுப் பிரதேசம் போர்த்துக்கல்லினுல் சீனுவிடம் கையளிக்கப்படவிருக்கின்றபோதிலும் இன்னும் '63 வருட காலங்களுக்கு இப்பகுதியின் நலன் மீது போர்த்துக்கல் உரிமை கொண்டிருக்கும்.

1999ம் ஆண்டுக்குப் பின்னர் வெளிவிகார', பாதுகாப்புத் துறை தவிர்ந்த அனைத்து நிர்வாக நடவடிக்கைகளையும் மக்காயோ தீவு சமஷ்டி அடிப்படையில் கவனித்துக்கொள்ளும்.

இரு வருடங்களுக்குமுன்னர் பிரிட்டனிடமிருந்து ஹொங்கொங்கை மீளப்பெறும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர், சீனு உர்மைகொள்ளும் இரண்டாவது காலனித்துவ பிரதேசம் மக்காயோ என்பது குறிப்பிடத்தக்கது.

---

## பூநகரி சங்குப்பிட்டித்துறையில்

# ஹெலி துப்பாக்கிப் பிரயோகம்: நால்வர் காயம், லொறி சேதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பூநகரி சங்குப்பிட்டித்துறையில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் தாக்குதலில் நால்வர் காயமடைந்தனர். லொறியொன்று பலத்த சேதமடைந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பூநகரி ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் சங்குப்பிட்டித்துறையில் மேற்படி சங்கத்திற்கு சொந்தமான லொறியில் பொருட்களை ஏற்றிக்கொண்டிருந்தபொழுது அவர்களை நோக்கி வந்த ஹெலி கடல் மட்டத்திற்கு தாழப்பறந்து வந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தினுல் பெரியதம்பி கணேஷ் (27 வயது) பூநகரி, நல்லூர், துரைசிங்கம்,கேதீஷ் (25வயது) அத்தாய், கணபதிப்பிள்ளை ரவீந்திரராசா (26வயது) நல்லூா (பூநகரி ப. நோ. கூ. சங்க ஊழியர்கள்), ஆசிரியர் சுப்பையா அமிர்தலிங்கம் (27 வயது) வவனியா ஆகியோர் காயமடைந்தனர். சங்க லொறி பலத்த சேதமடைந்துள்ளது.

காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப் ட்டு, பின் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (கு-ஓ)

---

# முல்லைத்தீவு பஸ் விபத்து மரணம்: பகிரங்கத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

பஸ் விபத்தொன்றில் காயமடைந்து அடையாளம் காணப்படாமல் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானவரின் மரணவிசாரணையைமேற்கொண்ட யாழ் பதில் நீதவான் ஏ. அன்ரனி பகிரங்க தீர்ப்பு வழங்கினுர்.

பஸ் விபத்தில் காயமடைந்த அடையாளம் காணப்படாத ஒருவர் முல்லைத்தீவு வைத்திய சாலையிலிருந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானுர்.

இவரது சடலம் அடையாளம் காண்பதற்காக பலநாட்கள் யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது.

இவரது மரணம் தொடர்பான விசாரணை மேற்கொள்ள யாழ். பதில் நீதவான் யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்தபொழுது சடலம் அடக்கம் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக யாழ். வைத்தியசாலை பொறுப்பதிகாரி, யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் ‍ல நாட்களாக

(6-ம் பக்கம் பார்க்க)

---

# தவறிய காசோலை கிடைத்தது

பலாலி, வியாழன்

தெல்லிப்பளையில்தவறுதலாக கைவிடப்பட்டிருந்த ஆயிரத்து நூறு ரூபா பெறுமதியான காசோலை ஒன்று வீதியில் கண்டெடுகப்பட்டு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

இக் காசோலைக்கு உரியவரான த. இராசேந்திரம் விடுதலைப்புலிகளிடம் ஆதாரம் காட்டி காசோலையை பெற்றுக்கொண்டார்.

---

# "அநியாயமான நடவடிக்கையால் அப்பாவிகளுக்கு நிம்மதியில்லை"

## – யாழ். பதில் நீதவான்

யாழ்ப்பாணம், வெள்ளி

"இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டினுல், இறந்தவரின் நெற்றியில் காயமேற்பட்டது. பின் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானுர்."

கெருடாவிலைச்சேர்ந்த நடராசா சிறிதரனின் மரண விசாரணையில் சாட்சியமளித்த இ. சி. தனபாலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். பதில் நீதவான் ஏ. அன்ரனி மரணவிசாரணை நடத்தினுர். தனபாலசிங்கம் மேலும் கூறியதாவது:

கெருடாவிலிலுள்ள எமது கமத்தில் நானும் இறந்தவரும்கடந்த 13-ம் திகதி காலை வேலைசெய்து கொண்டிருந்தோம். ஒன்பது மணியளவில் தொண்டமனுறு இராணுவ முகாமிலிருந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் தொடர்ந்து கேட்டவண்ணமிருந்தன. இதனுல் அச்சமடைந்த நாங்கள் கமத்திலுள்ள வீடொன்றில் மறைந்திருந்தோம்.

சத்தங்கள் ஒய்ந்தபி'கு திரும்பவந்து வேலை செய்தோம். அப்பொழுது தொண்டமனுறு இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினுல் இறந்தவரின் நெற்றியில் காயமேற்பட்டு நிலத்தில் விழுந்தார்

காயப்பட்டவரை அயலவரின் உதவியுடன் மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று அன்றுமாலை யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவந்தோம். அங்கு அனுமதிக்கப்பட்டவர் அன்றிரவு மரணமானுர்.

யாழ் பதில் நீதவான் எ. அன்ரனி இம் மரணம் கொலையெனத் தீர்ப்பளித்ததுடன் அநியாயமான நடவடிக்கைகளால் அப்பாவி விவசாயிகள், பொதுமக்கள் ஆகியோர் நிம்மதியாக வாழமுடியாதிருப்பதாகத் தெரிவித்தார்.

---

# கடனடிப்படையில் சைக்கிள்

பலாலி, வியா

தெல்லிப் ழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் த து சங்கத்தின்கீழ் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கடன் அடிப்படையில் சைக்கிள் வழங்கி வருகின்றனர். இதன்படி இதுவரை 50 க்கு மேற்பட்ட சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

---

## வீரமரணமடைந்த

# புலிகள் போராளி நினைவாக பஸ் நிலையம்

பண்டத்தரிப்புநிருபர்

இராணுவத்துடனுன மோதலில் வீரமரணமடைந்த இளவாலையைச் சேர்ந்த செல்வன் வெள்ளை [செபமாலை றெஜினுேல்ட்] யின் 41ம் நாள் நினைவு அஞ்சலியை முன்னிட்டு இளவாலை சந்தியில் நவீன பஸ் நிலையமொன்று அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 6ம் திகதியன்று பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்துடன் தமிழீழ விடுதலைப் போராளிகள் நடாத்திய நேரடி மோதலில் வீரமரணமடைந்த செல்வன். வெள்ளையின் ஞாபகார்த்தமாக பொது மக்களினுல் அன்பளிப்பு செய்யப்பட்ட நிதியை கொண்டு நிறுவப்பட்ட மேற்படி பஸ் தரிப்பு நிலைய திறப்பு விழா கடந்த வாரம் திரு. எஸ் சவரிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இளவாலை பங்குத் தந்தை அருட்திரு மைக்கல் ரி. பற்றிக் அடிகளார் மங்கலவிளக்கேற்ற அருட்திரு. அன்ரன் இராசநாயகம் அடிகளார் கட்டடத்தை சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தார். அருட்செல்வி. மேரி விக்றரின், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க வட்டுக்கோட்டை பொறுப்பாளர் திரு. பிரசாத் ஆகியோரும் உரையாற்றினர்.

---

## அமரர் பொன். குமாரசாமி

# "மனிதகுலத்தின் விடுதலைக்கு இறுதி மூச்சுவரை உழைத்தவர்"

யாழ்ப்பாணம், புதன்

மனிதகுலத்தின் விடுதலைக்காகவும், சமத்துவம் சகோதரத்துவம் என்னும் உன்னத இலட்சியங்களுக்காகவும் தனது இறுதி மூச்சுவரை உழைத்த தோழர் பொன். குமாரசாமியின் இழப்பு இந்நாட்டு பாட்டாளி வர்க்கத்

(6-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

தோல்விகளால் எமக்குக் கிடைக்கும்செயலறிவைவிட அவை பல தனிப்பட்ட லாபங்களையும் அவை எமக்குத் தருகின்றன. எம்மிடையே காணப்படுகின்ற பொய் கணிப்பீடுகளை தோல்விகள் களைந்தெறிவதுடன், எமது உண்மையான தேவை எது என்பதையும் உணர்த்துகின்றன. வண்ணத்திப்பூச்சிகளை விரட்டுவதைவிட்டு நாம் தங்கத்தை அகழ்ந்தெடுப்பதில் ஈடுபடவும் அது உதவுகிறது.

—வில்லியம் எம். மார்ஸ்டன்.

## நமது நோக்கு

# ராஜீவ் அலைக்கு இன்று சோதனை

கிரிக்கட் போட்டிகளில் இந்தியா பாகிஸ்தானிடம் இம்முறை பல தோல்விகளை எதிர்நோக்கநேர்ந்தது!

ஸ்ரீ ஹரி கோட்டாவிலிருந்து விண்வெளிக்கு செலுத்தப்பட்ட இந்தியாவின் முதலாவது உள்ளூர் தயாரிப்பு ஏவுகணை பழுதடைந்து கடலில் விழுந்து தோல்வியுற்றது!

மூன்று மாநில சட்டசபைகளுக்கு நடந்துள்ள தேர்தல்களில் இரண்டு மாநிலங்களில் முழு தோல்வியை இந்திராகாங்கிரஸ் கட்சி தழுவிக்கொண்டுள்ளது.

ஆக, விளையாட்டு, விஞ்ஞானம், அரசியல் ஆகிய மூன்று துறைகளிலும் இந்தியா இன்றையகட்டத்தில் பின்னடைவை எதிர்நோக்க நேர்ந்துள்ளது.

இந்தியாவின் நண்பர்களுக்கு இது கவலையளிக்கும் விடயமானாலும், அதன் எதிரி நாடுகளுக்கு மிகுந்த சந்தோஷத்தை அளிக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ஆனால் தோல்விகள் தோல்விகளாகவே இருந்துவிடுவதுமில்லை. வெற்றிகள் வெற்றிகளாகவே தொடர்வதுமில்லை. என்றாலும் தோல்விகளை வெற்றிகளாக மாற்றிக்கொள்வதும், வெற்றிகளைத் தொய்யவிடாமல் முன்னெடுப்பதும் சம்பந்தப்பட்டவர்களின் திறமையையும் விவேகத்தையும் பொறுத்திருக்கின்றது.

அன்னை இந்திராகாந்தியின் தலைமையில் காங்கிரஸ் கட்சி எதிர்பாராதவகையில் படுதோல்வியைத் தழுவிக்கொண்ட பொழுது அம்மையார் துவண்டுவிடவில்லை. ஆட்சிக்கு வந்த ஜனதாக்கட்சியினர்அவரை எவ்வளவு முடியுமோ அவ்வளவும் துன்புறுத்தினார்கள்; பாராளுமன்றத்தில் அமரும் உரிமையையும்கூட இல்லாமல் செய்தார்கள். ஆனால் அடுத்துவந்த தேர்தலில் அவர் அடைந்த வெற்றி பிரமிப்புக்குரியதாகவிருந்தது.

திருமதி இந்திராகாந்தி படுகொலைசெய்யப்பட்ட 90 நாட்களுக்குள் அவர் புதல்வர் திரு. ராஜீவ்காந்தி இந்தியாவிலேயே அதுவரை நிகழ்ந்திராத ஒரு சாதனையாக பொதுத்தேர்தலில் வெற்றிகளை ஈட்டினர். அன்னையார் கொலையுண்டதின் விளைவாக ஏற்பட்டிருந்த அனுதாபமும் ராஜீவ்மீது ஏற்பட்டிருந்த நம்பிக்கையும் அந்த வெற்றியை ஈட்டித் தந்தன. நான்கு ஆண்டுகளில் இந்தியா பல சோதனைகளை கடந்துள்ளது. இந்தச் சோதனைகளில் உள்நாட்டு வெளிநாட்டுப் பிரச்னைகளில் திரு. காந்தியின் அரசு மேற்கொண்ட செயற்பாடுகளின் விளைவு இம்முறை இக் குட்டித் தேர்தல்களில் பிரதிபலித்துள்ளன.

கேரள மாநிலத்தில் ஏற்கனவே பதவியிலிருந்த இந்திரா காங்கிரஸ்கட்சி தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி தோல்வியுற்று மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சி தலைமையிலான இடதுசாரி ஜனநாயகமுன்னணி பதவிக்கு வந்துள்ளது.

கட்சி உள்பூசல்களே காங்கிரஸ் முன்னணி தோல்வியுற்றதற்கு முக்கிய காரணமென முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாகரன் கருத்து வெளியிட்டுள்ளார்.

கேரளம் பல்லின மக்களையும் ஜாதி அமைப்புக்களையும் கொண்ட தென்னக மாநிலமாக இருந்தபோதிலும் அங்கு பெரும்பாலும் இடதுசாரி அரசியலுக்கு எப்போதுமே அனுதாபம் இருந்துவருகின்றது. இந்நிலையில் பதவியிலிருந்த காங்கிரஸ் முன்னணிக்குள் ஏற்பட்ட பேதங்களும், பூசல்களும்இடதுசாரிகளின் மீது மக்கள் அதிகநம்பிக்கை வைக்க உதவியிருக்கமுடியும்.

அதேவேளை மத்திய தலைவர்களாலும் இந்தப்போக்கினைக் கட்டுப்படுத்தமுடியாமல் போனமை இன்னொரு காரணமாகலாம். மேலும் தென்மாநிலம் என்பதால் இலங்கைத்தமிழர் பிரச்னையில் மத்திய-மாநில அரசுகளின் ஸ்திரமற்ற கொள்கையும் பிரதிபலித்திருக்கமுடியும்.

மேற்கு வங்காளத்தைப் பொறுத்த அளவிலும்கூட அது இடதுசாரி மாநிலமாகவே பலகாலம் இருந்துவருகின்றது. அங்கே ஏற்கனவே தன்வசம் இருந்த 25க்கு மேற்பட்ட தொகுதிகளை காங்கிரஸ்கட்சி இம்முறை கோட்டை விட்டுள்ளது.

கடந்த தேர்தலின்போது 'ராஜீவ்' அலையின் காரணமாகக் கைப்பற்றிய இடங்களும்கூட இம்முறை கைநழுவியுள்ளனவென்றால் மத்திய அரசின் போக்கில் வங்காளமக்கள் போதிய திருப்தி கொள்ளவில்லை என்பதை புரிந்துகொள்ளலாம்.

குறிப்பாக மேற்குவங்கத்தின் ஒரு பகுதியான 'குர்க்கா' இனத்தவர் பிரச்னையில் அங்கு சிக்கல் நிலவுகின்றது. இப்பிரச்னையை மத்திய அரசு கையாளும் விதத்தில் பெரும் அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகக் கருதலாம்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தைப் பொறுத்தவரை டாக்டர் பரூக் அப்துல்லாவுடன் கூட்டுக் சேர்ந்ததின் வாயிலாக இந்திரா காங்கிரஸ் தன்நிலையைஸ்திரப்படுத்திக் கொள்ள முடிந்துள்ளது.

பொதுவில் மூன்று மாநிலங்களிலும் நடந்துமுடிந்துள்ள தேர்தல்களின் முடிவுகள் இந்திரா காங்கிரஸின் கடந்தகால சாதனைகளில் அங்குள்ள மக்கள் திருப்திகொள்ளவில்லை என்பதை எடுத்துக்காட்டியுள்ளன.

இது இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும், அதன் தலைவருக்கும் மக்கள் விடுத்திருக்கும் ஒரு எச்சரிக்கையாகவே கருதப்படவேண்டும்.

ஏனைய மாநில சட்டசபைகளுக்கும், மத்திய பாராளுமன்றத்துக்கும் அடுத்து நடைபெறப்போகின்ற . தேர்தல்களின் முடிவுகளையும் இவை நிர்ணயிப்பவையாகஅமையலாம்.

எனவே, இன்றைய தோல்விகளின் காரணகாரியங்களை முறைபாக ஆராய்ந்து இழநத நம்பிக்கையை மீண்டும் நிலைநாட்டிக் கொள்வதற்கான முயற்சியில் இந்திரா காங்கிரஸ் கட்சியும் அதன் தலைவர்களும் ஈடுபடுவார்களென்று எதிர்பார்க்கலாம்.

இப்போதைய தோல்விகளை அடுத்த வெற்றிக்கான படிக்கல்லாக மாற்றிக் கொள்ளும் தகுதி அன்னையைப் போன்று தனையன் ராஜீவுக்கும் இருக்கும் என்றே நாம் நம்புவோம்.

## இலங்கையில் மனித உரிமைகள் மீறல் – 8

# யுத்த நிறுத்தக் குழுவின் தீர்ப்புகளையும்

## அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை

**85ம்** ஆண்டின் இறுதிப் பகுதியில் உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்தக்குழு யுத்த நிறுத்த மீறல்களை விசாரிப்பதற்காக சம்பவம் நடந்த மாவட்டங்களுக்கு சென்றிருக்கையிலேயே அம் மாவட்டத்தில் வேறொரு இடத்தில் படையினரால் மக்கள் கொல்லப்பட்ட சம்பவங்கள் பல இடம்பெற்றன. இச்சம்பவம் பற்றிய இக் குழுவின் தீர்ப்புக்களுக்கு கூட அரசாங்கம் செவிசாய்க்கவில்லை.

அம்னெஸ்ரி இன்டர்நஷனல் 86ம் ஆண்டு ஏப் 30ம் திகதி வெளியிட்ட அறிக்கையொன்றின் சாராம்சம்:

"85 ஒக் 2ம் திகதி கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தைத் தாக்கியோரைத் தேடுதல் என்ற போர்வையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின்போது 18 கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டதாக அரசாங்கம் அறிவித்தது.

"ஆயினும் சம்பவங்களை நேரிற் கண்டோரின் தகவல்களின்படி கொல்லப்பட்டோரிற் குறைந்தது 14பேர் தமிழ் சிவிலியன்கள். அன்று காலை 6மணியளவில் பிரமந்தனாறு விஸ்வமடு பகுதிகளில் 5ஹெலிகொப்டர்களில் வந்திறங்கிய படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது பல வீடுகளைத் தீயிட்டதுடன் 14 ஆயுதபாணிகளற்ற சிவிலியன்களையும் சுட்டுக்கொன்றனர். இவர்களில் எட்டுப்பேர் 40ம் வாய்க்காலடியில் கொல்லப்பட்டனர்.

### முழங்காவில் பிள்ளையார் கோவிலில்

நவம்பர் மாதம் 1ம் திகதி 8துருப்பினர் முழங்காவிலில் உள்ள பிள்ளையார் கோவிலடியில் ஹெலிகொப்டர் ஒன்றில் வந்திறங்கினர். பின்னர் காலை 11 மணியளவில் அவ்வழியால் சென்ற 6 பேரைக் கைது செய்து மாலை 4 மணிவரை வைத்திருந்துவிட்டு மீண்டும் ஹெலிகொப்டரில் புறப்படுகையில் 5பேரைச் சுட்டுக் கொன்றனர். இக் கொலைகளை நேரில் கண்ட ஒரு பெண்ணின் வாக்குமூலம்"

"...சம்பவம்நடந்த தினம்11 மணியளவில் எனது கணவர் அரச டிஸ்பென்ஸறிக்குச்சென்றார். காலை 9.30 முதல் முழங்காவில் கிராமத்திற்கு மேலாக ஹெலி ஒன்று சுற்றிக்கொண்டிருந்ததால் பதற்றமாயிருந்தது. சில படையினர் கோவிலடியில் இறக்கப்பட்டனர். எனது கணவர் மாலை 4 மணியாகியும் வீடு திரும்பாததால் அவரைத்தேடி சந்தைப்பக்கம் சென்றேன். கோவிலை அண்மிக்கையில் அப்பக்கமாக இருந்து சூட்டுச் சத்தங்களைக் கேட்டேன். அவ்விடத்தை அடைந்தபோது படையினர் எனது கணவரையும் வேறு நான்கு பேரையும் சுடுவதைக் கண்டேன். பின்னர் அவர்கள் ஹெலியிலேறி சென்றனர். நான் கணவரருகில் சென்று பார்த்தபோது அவர் இறந்துகிடப்பதைக் கண்டேன்..."

நவம்பர் 8ம் திகதி கடற்கரைசேனையை அடைந்த படையினர் சேனையூர் கட்டைபறிச்சான்கிராமங்களைநோக்கி நகர்ந்தனர். அங்கு அவர்கள் 8 தமிழர்களிற் சிலரை வீடுகளில் வைத்தும் சிலரை வீடுகளிலிருந்து கட்டை பறிச்சான் சந்திக்கும் கூட்டிவந்தும் சுட்டுக்கொன்றனர். பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் வாக்குமூலம்.

"...8ம் திகதி எனது கணவர் வீட்டிலிருந்தார். அப்போது ராணுவச் சீருடையில் வந்த சிலர் எனதுகணவரை அழைத்துச் சென்றனர். கட்டைபறிச்சான் என்னுமிடத்தைக் காட்டப் பணித்தனர். எமது வீட்டிலிருந்து 200 யார் தூரம் தள்ளிக் காட்டுக்குள் அவர் அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது நான் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களைக் கேட்டேன். காட்டுக்குள்நான் சென்றுபார்த்தபோது எனது கணவரின் சாரத்தில் ரத்தம் ஊறிக்கிடக்கக் கண்டேன். மேலும் நகர்ந்து சென்றபோது ஒரு மரவீட்டைக் கண்டேன். அப்போது எனதுகணவருடையதுட்பட 8பேரின் எரிந்த சடலங்களைக் கண்டேன்.

நவ 9ம் திகதி கந்தளாய் கிராமத்துக்குச்சென்றராணுவ குழுவொன்று அங்கு தமிழருக்குச் சொந்தமான வீடுகளில் வசிப்போரின் விபரங்களை திரட்டிச் சென்றது. இந்தநடவடிக்கையின்போது பல ஆண்கள் தாக்கப்பட்டனர். அங்குள்ள இந்துக் காவிலுள் பிரவேசித்த படையினர் அங்கிருந்த மதகுருவையும் தாக்கினர்.

11ம் திகதி இரவு கோவில் வீதிவழியாக வந்த படையினர் பல வீடுகளின்படலைகளைத் தட்டினர். அச்சத்தின்காரணமாக பலர் கதவைத் திறக்கவில்லை. சௌந்தரியம்மா என்பவரின் வீட்டினுள் நுழைந்த ராணுவத்தினர் அவரது 33 வயது நிரம்பிய மகளை கைது செய்தனர். பின்னர் மயில்வாகனம் என்பவரின் வீட்டிலிருந்து எம். ராஜேஸ்வரி (24 வயது), எம். சாந்தி (20 வயது], கே. சண்முகராஜா [35 வயது], என். தேவராஜா [34 வயது] ஆகியோரைக் கைது செய்தனர். பின்னர் பக்கத்து வீட்டுக்குச் சென்ற ராணுவத்தினர் வி. மகேந்திரராஜா (30 வயது) என்பவரையும் கைது செய்தனர்.

அதிகாலை 2 மணியளவில் இந்த 6 பேருடன் ராணுவத்தினர் புறப்பட்டுச்சென்றனர். அடுத்த நாள்காலை சூட்டுக் காயங்களுடனும், வெட்டுக் காயங்களுடனும் இந்த 6 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

தேசிய ஐக்கியத்துக்கான திருமலை பிரஜைகள் குழுவின் அறிக்கையிலிருந்து இத்தகவல்கள் தொகுக்கப்பட்டன.

நவ. 13ம் திகதி மட்டக்களப்பு லேக் வீதியில் தமிழ் கெரிலா குழுவொன்றினால் வைக்கப்பட்டதாகக் கூறப்படும் கண்ணிவெடி வெடித்ததில் அவ்வழியால் ஜீப்பில் சென்றுகொண்டிருந்த 5 பொலிஸ் கமாண்டோக்கள் காயமடைந்தனர். இச்சம்பவம் நடந்து 10 நிமிடங்களுக்குள்ளாக அங்குவந்த கமாண்டோக்கள் அங்கிருந்த சிவிலியன்களைக் கைது செய்தனர். சிறிது நேரத்தின்பின்னர் இவர்களை ஓடுமாறு பணித்துவிட்டு ஓடுகையில் சுட்டுக்கொன்றனர்.

இந்தச் சம்பவம் நடந்து கொண்டிருக்கையில், யுத்த நிறுத்தக்குழு மட்டு நகரசபை மண்டபத்தில் யுத்தநிறுத்த மீறல்குறித்து விசாரணை செய்துகொண்டிருந்தது. [டிச. 18 வரை யுத்தநிறுத்தம் அமுலிலிருந்தது தெரிந்ததே] யுத்த நிறுத்தக்குழு பின்னர் சம்பவம் நடைபெற்ற இடங்களுக்குச் சென்று பார்வையிட்டனர். சாட்சிகளும் பதியப்பட்டன. பாதுகாப்புப்படையினர் சாட்சியமளிக்கையில்: இந்த சிவிலியன்கள் 'இருதரப்பு' துப்பாக்கி பிரயோகத்தின்போது' [Cross Fire] இறந்ததாகக் கூறினர்.

ஆயினும் கொல்லப்பட்டோரின் மரணவிசாரணை அறிக்கையின்படி 6 பேர் பின்னால் இருந்தும். இருவர் பக்கவாட்டிலிருந்தும், ஒருவர் முன்னால் இருந்தும சுடப்பட்டது தெளிவாகியது

விசாரணையின்பின்னர்: (1) காயமடைந்து தப்பிய எவரும் இல்லாததாலும், (2)பாதுகாப்புப் படையினரிடையே கொல்லப்பட்டோர் எவரும் இல்லாததாலும், (3) கமாண்டோக்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட 2 ஜீப்புக்களில் எதிலும் சூட்டினால் சேதப்படாததாலும், (4) பலியானோரில் பெருமபாலானோர் அவர்களின் இதயத்தினூடாகச் சென்ற ஒருதனி சன்னத்தினால் கொல்லப்பட்டதாலும் படையினரின் மேற்கூறிய வாக்குமூலததை யுத்த நிறுத்தக்குழு நிராகரித்தது.

நவ. 16 ம திகதி மட்டு.பார் வீதியில் தமிழ்க்குழுவொன்றினால் வைக்கப்பட்டதாகக் கூறப்படும் கண்ணிவெடி வெடிததில் 4 பொலிசார் பலியாகினர். இதனையடுத்து அங்குள்ள விசேட அதிரடிப் படையினர் 9 சிவிலியன்களைச் சுட்டுக்கொன்றதுடன் 15 கடைகள் மற்றும் பல வீடுகளைக் கொள்ளையடித்ததுடன் அவற்றை தீயிட்டுச் சேதப்படுத்தினர்.

இச் சம்பவத்தையும் விசாரித்த யுத்தநிறுத்தக் குழுவினர், இந்தப்பொதுமக்கள் இருதரப்பு துப்பாக்கிப் பிரயோகத்தினபோது கொல்லப்பட்டனர் என்ற படையினர் கருத்தை நிராகரித்தது.

தமிழ் கொல்லாக்குழுவொன்றின் உறுப்பினர் எனக் கூறப்படும் சிலரால் புத்தபிக்கு ஒருவர் டத்தப்பட்டதற்குப் பழிவாங்கும் நடவடிக்கை போல் மட்டு மாவட்டத்தில் மண்டூர் கிராமத்தில் கனரக வாகனங்கள், ஹெலிகொப்டர்கள் துணையுடன் படையினர் நடத்திய தாக்குதலில் 24 கடற்றொழிலாளர் பலியாகினர். பலர் காணமல்போய்விட்டனர். பலர் மண்டூரிலிருந்து படகுமூலம் தப்பிச்செல்கையில் மேலே பறந்த ஹெலிகொப்டர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டனர்.

### சம்பூர் படுகொலை

நவ. 27 இல் ஊர்காவற் படையினருடன் திருமலை

(5-ம் பக்கம் பார்க்க)

## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

ஒருநாள் கோழிக்குஞ்சுகளும் இறைச்சிக் கோழிகளும் (Broilers) விற்பனைக்குண்டு. தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தேவைக்கு அண்ணா பாம் இணுவில் செம்மாதெரு. யாழ்ப்பாணம். ஏ-3777

### தவறிவிட்டது

திரு. க. ஆறுமுகம் தெல்லிப்பழை என்பவருடைய கார் வாகனப் பதிவுப் புத்தகமும், மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகமும் அதற்குரிய காப்புறுதிப்பத் திரங்களும் இல. 769 மினிபஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. ஆறுமுகம், சீமெந்து வியாபாரி, தெல்லிப்பழை. சி-8231

## 31-ம் நாள் நினைவஞ்சலி



செல்வி ஆரணி
ஜெயதாசன் (தங்கா)
மலர்வு: 18- 7- 77
உதிர்வு: 24- 2- 87

அம்மனின்
அருளினுலே
ஆரணியாய்
வந்துதித்தாய்
எம்முடனே பத்தாண்டு
எழிலுடலே
இருந்திட்டாய்
நீள் துயில்
கொண்டனையோ?
நிமலனடி
சேர்ந்தனையோ?
ஆழ்துயர்க் கடலியில்
அமிழ்த்தினையோ
எங்களைநீ!

கண்ணீரில் தத்தளிக்கும், உனது அன்புப் பெற்ருேர் உற்ருர், உறவினர், நண்பர்கள்.
புது வீதி,
கருகம்பானை.

(சி-8228)

LIDO
From Today
Daily at 10-30 a.m.
2-30 & 4-30, 6-30 p.m.
MAX DUGAN
RETURNS
(colour & action)

புதிய வெளியீடு
**வெலிங்டன்** திரையில்
Super Star Bruce Lee in
THE MAGNIFICENT
KICK
(Karate Film)
புருஸ்லீ நொடிநேரத்தில் 3 முறை உதைக்கும் பயங்கர கராட்டிகள் நிறைந்தது.

### படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போது அங்கு வந்த இராணுவத்தினர் சிலர் ஒவ்வொரு நகைப் பொதியிலிருந்தும் ஒரு நகை வீதம் தமக்கு வழங்குமாறு கேட்டதாக அச்செய்தியில் கூறப்பட்டிருந்தது.

இச் செய்தி தவறென் ம், அவ்வாறு ராணுவத்தினர் எவரும் கேட்கவில்லையென்றும் மக்கள் வங்கி உதவிப் பொது முகாமையாளர் திரு என். எஸ். பி. ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

நல்லூர்
ப. நோ. கூ.
சங்கம்

## வெற்றுச்சாக்கு விற்பனை

எம்மிடம் 5000 வெற்றுச் சாக்குகள் வரையில் கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்க விரும்புவோர் காரியாலய நேரத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி 31-3-87.

பொ. சோமாஸ்காந்தன்,
பொதுமுகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
திருநெல்வேலி

(சி-3778)

## யுத்த நிறுத்தக்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் கட்டைப்பறிச்சான், சேமையூர், சடல்கரைச் சேனை சம்பூர் கிராமங்களை அடைந்த பாதுகாப்புப்படையினர் நடத்திய 'தேடுதல்-அழித்தல்' நடவடிக்கையில் 22 தமிழர் கொல்லப்பட்டனர். 165 வீடுகள் எரிக்கப்பட்டன.

காலை 4-30 மணிக்கு கட்டைப்பறிச்சான் சென்றபடையினர் 25 வீடுகளுக்குத் தீ வைத்ததுடன் இருவரைக் கைது செய்தனர். பின்னர் சேமையூர் சென்று 9 பேரைக் கைது செய்தனர். 20 வீடுகளுக்குத் தீவைத்தனர். பின்னர் கடல்கரைச்சேனைக்குச் சென்ற அவர்கள் மேலும் 20 வீடுகளுக்குத் தீவைத்து 6 பேரைக் கைதுசெய்தனர்.

இறுதியாக சம்பூர் சென்று கதிமுகா மொன்றில் இருவரைக் கைதுசெய்ததுடன் 100 வீடுகளுக்குத் தீவைத்தனர். கைதுசெய்யப்பட்ட 22 பேரில் 18பேரை சம்பூரில் சுட்டுக் கொன்ற பின்னர் சடலங்களை எரித்துவிட்டனர். பின்னர் ஏனைய நால்வரும் படையினரால் கடற்கரைச்சேனைக்கு கூட்டிச் செல்லப்பட்டு, அங்கு கடலில் தரித்துநின்ற பீரங்கிப் படகுநோக்கி பிளாஸ்ரிக் படகு ஒன்றில் கூட்டிச்செல்லப்பட்டனர். படையினர் பீரங்கிப் படகில் ஏறிய பின்னர், படகின் ஒரு மூலையில் உட்காருமாறு பணிக்கப்பட்டிருந்த நால்வரையும் சுட்டுவிட்டு கடலில் தள்ளினர். மூவர் கொல்லப்பட்டனர் இந்தத் துரச் சம்பவத்தை உலகுக்கு எடுத்துச் சொல்ல ஒருவர் மட்டும் உயிர் தப்பினர்.

திருமலை மாவட்டத்தின் மன்னம்பொடிவெட்டை கிராமத்தில் டிசம்பர் 6ம் திகதி அதிகாலை நுழைந்த படையினர் 5 பெண்களை மானபங்கப் படுத்தியதுடன், 10 ஆண்களைக் கூட்டிச்சென்றனர். அடுத்தநாட்காலை இவர்கள் சடலங்களாக மீட்கப்பட்டனர். தொடர்ந்து வந்த நாட்களில் அரச பத்திரிகைகளில், ''தமிழீழப் பிரசுரங்களுடன் சிங்கள தீவிரவாதிகள் கைது'' சேருநுவர முகாமிலிருந்து தப்பிச்செல்லமுயன்ற 10 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்' என்று செய்திகள் வெளியாகின.

### கிறிஸ்மஸ் கொலைகள்

கிறிஸ்மஸ் தினத்தன்று திருமலையில் ஊர்காவல் படையினர் ஒரு வீட்டினுள் புகுந்து இரு பெண்களையும் ஒருசகோதரனையும் கூட்டிச் சென்றனர். இரு பெண்களில் ஒருவர் சூட்டுக் காயங்களுடனும் மற்றையவர் இறந்த நிலையிலும் இடிமன் ஆற்றுக் கரையில் கண்டெடுக்கப்பட்டனர். இறந்த பெண் மானபங்கப்படுத்தப் பட்டிருந்தார். இளைஞனுக்கு என்ன நிகழ்ந்ததென்பது இதுவரை தெரியவில்லை.

### 2342 பேர் கொலை

சுயாதீன மனித உரிமைகள் ஸ்தாபன அறிக்கைகளின்படி 85ம் ஆண்டில் தமிழ்ப் பகுதிகளில் 2342 பேர் கொலை செய்யப்பட்டனர்,529 பேர்''காணமற்போயுள்ளனர்.

தொகுப்பு: ஸே—
(தொடரும்)

## கேள்வி அறிவித்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் 29-03-87 கொடியேற்றம் தொடங்கி 15-04-87 வரை தீர்த்த உற்சவ காலம் வரையுள்ள காலங்களில் உடைக்கப்படும் தேங்காய்களுக்கான கேள்வி விண்ணப்பம் சகலரிடமிருந்தும் கோரப்படுகின்றன. தேவையானோர் நேரடியாக வந்து முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்.
மருதடி விநாயகர் ஆலயம்,
மானிப்பாய்.

(சி-8233)

## மிது வீடியோ மூவிசாரின் புதிய வெளியீடுகள்

1. ★ அர்ச்சுன் ★ சரத்பாபு ★ சீதா நடித்த **சங்கர் குரு**
2. ★ சிரஞ்சீவி ★ ராதா நடித்த **காலியூர் காத்தான்**
3. ★ கிருஷ்ண ★ ஸ்ரீதேவி நடித்த **தர்மத்தின் வெற்றி**
4. ★ சிவாஜி ★ காஞ்சனு நடித்த **சிவந்தமண்**
5. ★ ஜெமினி கணேசன் ★ வைஜந்திமாலா நடித்த **தேன் நிலவு**
6. ★ ஜெமினி கணேசன் ★ தேவிகா நடித்த **வாழ்க்கைப்படகு**
7. ★ ஜெமினி கணேசன் ★ சாவித்திரி நடித்த **பாதகாணிக்கை**
8. ★ ஜெமினி கணேசன் ★ பாரதி நடித்த **அவளுக்கென்று ஓர் மனம்**

எமது அடுத்த புதிய வெளியீடு
★ உங்கள் சத்தியராஜ் ★ அம்பிகா நடித்த
**ஆளப்பிறந்தவன்**


**மிது வீடியோ மூவிஸ்,**
பிரதான வீதி, சித்தன்கேணி.

(எ-3818)

## சீவல் தொழிலாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ் குடாநாட்டிலுள்ள சகல சீவல் தொழிலாளர்களினதும் கூட்டமொன்று நாளை சனிக்கிழமை காலை 11 மணிக்கு மனோகரா தியேட்டரில் நடைபெறவுள்ளது.

## 6வது மாத நினைவஞ்சலி



அமரர் கனகராசா
கதிரமலை
(வடபிராந்திய
சர்வோதய வெளிக்கள
இயக்குநர்)
தோற்றம்; 05- 08 - 1953
மறைவு: 26- 09- 1986

இலட்சிய புருஷனுக வாழ்ந்து வந்துள்ள நீங்கள், ஸ்தூல உடலை விட்டுச் சென்று 6 மாத காலம் சென்றுவிட்டாலும், உங்கள் சர்வோதயக் கொள்கைகள், மேலான மானுடச் சிந்தனைகள், செயல்பட்டு ஈடேறுவதற்கு எங்களுடன் சூட்சும உடலாக இருந்து வருகின்றீர்கள் எனக்கூறி எமது இதய அஞ்சலியைச் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

வடமாகாண சர்வோதய தொண்டர்கள்.

(சி-8229)

### காலமானர்

(கொழும்பு)

பேராசிரியர் கே. டபிள்யூ. மயில்வாகனம்நேற்று கொழும்பில் காலமானர். இவர் இலங்கைபல்கலைக்கழக மானிய குழுவின் உறுப்பினராக இருந்ததுடன் பிரபல அறிஞர்களுடைய நன்மதிப்பை பெற்றவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

### யுத்தகைதிகளை

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இவ்விடயம்பற்றி ஈழநாடு பத்திரிகைக்கு விசேஷமாக தெரிவித்துள்ளதாவது:

யாழ் நகருடன் தற்போது தொலைத்தொடர்புச் சேவைகள் இல்லாமையால் தளபதி கிட்டுவுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளமுடியாதுள்ளது.

எனது குழுவினர் யாழ். வர ஆயுத்தமாகவிருப்பதினுல் இதற்கான திகதியினை எனக்கு பத்திரிகைவாயிலாக தெரிவிக்குமாறு நான் திரு. கிட்டுவிடம் வேண்டுகோள் விடுகிறேன்.

திரு. விஜய மாரணதுங்காவுடன் கடந்த வருடம் யாழ்ப்பாணம் சென்ற நான் இப்பிரச்னை தொடர்பாக பேராளிகளுடன் மீண்டும் ஒருமுறை தொடர்புகொள்ள யாழ். செல்ல உத்தேசித்த போதும் அதற்கு ஆக்கபூர்வமான உதவிகளை அரசு செய்துதரவில்லை. எனவே இம்முறை எனது யாழ். விஜயத்திற்கு தமிழ் ஈழவிடுதலை புலிகள் வேண்டிய ஒத்தாசைகளை தருவார்கள் என நம்புகிறேன்.

தென்பகுதி பிரமுகர்களுடன் இம்முறை யாழ். விஜயம் மேற்கொள்ள விருப்பதினுல் தற்போதை இனப்பிரச்னைக்கு ஒருசமரச தீர்வுகாண அரசினை வற்புறுத்த ஏதுவாக அமையுமென நான்கருதுகிறேன். (கே)

### தமிழ்பேசும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட இணைப்புக்குழு உறுப்பினர் பரா இவ்வாறு கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது:

சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தை என்று கூறிக்கொண்டு ஈழமக்கள் மீதான இராணுவ நடவடிக்கைகளைப் பலப்படுத்தி வருகிறது. இதனுல் இராணுவ முகாம்களைச் சுற்றியுள்ள மக்கள் தினமும் வெளியேறிக் கொண்டிருக்கிருர்கள். இதனை அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி திட்டமிட்டு தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றி வருகிறது.

இன்றைய சிறிலங்கா அரசு தமிழ்ப்பிரதேசங்களின்கேந்திர நிலையங்களைக் கைப்பற்றுவதன் மூலமும் போராளிகளின் கடல் போக்குவரத்தைத் தடை செய்வதன் மூலமும் இந்தியாவுக்கும் போராளிகளுக்குமிடையே தொடர்பைத் துண்டிக்கச் செய்வதன் மூலமும் வடக்குக் கிழக்கு இணைப்பை நிறுத்தி பிரித்தெடுக்க முயல்வதன் மூலமும் ஆக்கிரமிக்க முயல்கிறது.

பலாலி இராணுவ முகாம் இன்று நாலாயிரம் ஏக்கர் நிலப்பரப்பு வரை விஸ்தரிக்கப் பட்டுள்ளது. 1987ம் ஆண்டு தமிழ்ப்பிரதேசங்களில் இருந்த இராணுவ பலத்தை விட இன்று பத்து மடங்கு இராணுவம் குவிக்கப்பட்டு 145 இராணுவ முகாம்கள் வரை போடப்பட்டுள்ளது.

இந்திய மத்தியஸ்தத்தின் அடிப்படையில் எத்தனையோ முறை பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டபோதும் தமிழ் மக்களின் அபிலாஷைகள் அதில் பிரதிபலிக்கவில்லை. வடக்குக், கிழக்கு மலையகத்தை உள்ளடக்கிய சோஷலிஷ ஈழ அரசை உருவாக்குவதே எமது இலட்சியமாகும்.

இக் கூட்டத்தில் தோழர்கள் செல்வநாயகம், நவரத்தினம், சு. லோகநாதன் எட்வேட் ஆகியோரும் உரையாற்றினர்கள். (வா)

## கொக்கரையிலிருந்து பனை மரம்

(வல்வெட்டித்துறை)

நிலத்தில்தான் பனை வளரும். ஆனால் மரத்தின் உச்சியில் கொக்கரையில் பனை வடலி ஒன்று வளர்ந்துள்ள அதிசயம் பொலிகண்டி கந்தவன ஆலயத்திற்கு அருகில் நிகழ்ந்துள்ளது.

பனம் கொக்கரையில் இருந்து சிறுசிறு ஓலைகளுடனும், ஒன்பதுநொங்குக் குலைகளுடனும் ஒரு பனையில் இவ்விதம் கொக்கரை ஒன்று வடலியாக வளர்ந்துள்ளது.

இவ்ஒன்பது நொங்குக் குலைகளின் பாரம் தாங்காது கொக்கரை கீழே விழுந்தபோதே இவ்அதிசய நிகழ்வு அவதானிக்கப்பட்டது. [சி]

### யாழ். நகரின்

# மாபெரும் கிரிக்கெட் போட்டி இம்முறை நடைபெறும்?

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்.நகரில் மாபெரும் கிரிக்கெட் போட்டியாகக் கருதப்படும் யாழ். மத்திய கல்லூரி-சென்ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான வருடாந்தக் கிரிக்கெட் போட்டி இம்முறை நடைபெறவிருப்பதாகத் தெரியவருகின்றது

இப்போட்டி அனேகமாக அடுத்தமாதம் 3ம், 4ம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி இரு கல்லூரிகளுக்கிடையிலான இப்போட்டி பல வருடங்களாக யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் மிகவிரிவான முறையில் நடைபெற்று வந்தது. யாழ். மத்திய கல்லூரிக்கு மிக அண்மையிலுள்ள, யாழ். கோட்டையில் இராணுவமுகாம் அமைக்கப்பட்டதினால், கடந்த 3 வருடங்களாக இப்போட்டியை எங்கு நடாத்துவது என இரு கல்லூரிகளின் நிர்வாகத்துக்குமிடையில் ஏற்பட்ட இழுபறிபாடுகளுக்கிடையில் சுமுகமான இணக்கம் தற்போது ஏற்பட்டதினால், இம்முறை இப்போட்டி நடைபெறவிருக்கின்றது. (வி)

## விமர்சன அரங்கு

யாழ்ப்பாணம் வெள்ளி

கரவைக்கிழாரின் பனங்காம அரசன் கயிலை வன்னியனின் வரலாற்று நாடகம் தணியாத தாகம்' என்னும் பெயரில் வீடியோ திரைப்படமாகியுள்ளது. இப்படத்தின் விமர்சனம் நாளை மறுதினம் ஞாயிறு பிற்பகல் கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கதாசிரியர் கரவைக்கிழார் தணியாத தாகம் நெறியாள்கையாளர் கரவை முருகுஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

## இடமாற்றம்

பலாலி, வியாழன்

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிய எஸ். சிவகடாச்சம், எம். பிறேம் குமார், எஸ் அருணா ஆகிய மூவரும் காங்கேசன்துறை மார்புநோய் சிகிச்சை நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## புதிய பாலர் பாடசாலை

பலாலி, வியாழன்

அச்சுவேலி கதிரிப்பாய் ஆரம்ப சுகாதார நிலையத்தினரால் புதிய பாலர் பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின்போராளி கஜனின் பெயரிலே இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு விழா

ஊர்காவற்றுறை, வியா.

புங்குடுதீவு காந்தி சன சமூக நிலையத்தின 35-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தீவுப்பகுதி ரீதியில் உதைபந்தாட்டப்போட்டி, கரபந்தாட்டப்போட்டி, தாச்சிப்போட்டி போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெறஉள்ளன.

## நோயாளர் அதிகரிப்பு

பலாலி, வியாழன்

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை வெளி நோயாளர் பகுதியில் நோயாளர் வரவு அதிகரித்துள்ளது.

சேந்தாங்குளம், சிறிமலை, அளவெட்டி ஆகிய இடங்களிலிருந்தும் நோயாளர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். இப் பகுதி மக்கள் முன்னர் தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக சென்றது குறிப்பிடத்தக்கது,

### தெல்லிப்பழை பகுதியில்

# இராணுவ நடவடிக்கையால் 3கோடிரூபாசொத்துநஷ்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தெல்லிப்பழைப் பகுதியில் கடந்த மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் அழிக்கப்பட்ட வீடுகள் விவசாயப் பொருட்கள், வீட்டுத்தளபாடங்கள் ஆகியவற்றின் பெறுமதி 3 கோடி ரூபாவுக்கு மேற்பட்டதென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது

தெல்லிப்பழைப் பகுதியில் சென்ற பெப்ரவரி மாதம் 28ம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 3ம் திகதிவரை இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் மயிலிட்டி தெற்கு கட்டுவன் வறுத்தலைவிளான், குரும்பசிட்டி ஆகிய பகுதிகளில்உள்ள வீடு வாசல்கள் மற்றும் உடைமைகள் சேதப்படுத்தப்பட்டும் அழிக்கப்பட்டதும் தெரிந்ததே.

பல வீடுகள், ஐந்து கல்லுடைக்கும் ஆலைகள், இரண்டு அரிசி ஆலைகள், கோயில்கள், பாடசாலைகள் ஆகியனவும் முற்றாக சேதமடைந்துள்ளன.

சேதமடைந்த விபரங்களும், மதிப்பீடுகளும் பிரிக்கேடியர் ஜெரி சில்வாவிடமும்,தெல்லிப்பழை உதவி அரசாங்கஅதிபரிடமும் பாதிக்கப்பட்டோரினால் கையளிக்கப்பட்டுள்ளது எனத்தெரியவருகிறது. (வா)

## மாணவனுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

அண்மையில் வெளியான க. பொ. த சாதாரணப் பரீட்சை முடிவுகளில் கந்தரோடை ஸ்கந்தவரோதயக்கல்லூரி மாணவன் புவனேந்திரநாதன் ஆதவன் எட்டுப் பாடங்களிலும் அதிவிசேடசித்தி பெற்றுள்ளார்.

இவரின் சாதனையைக் கௌரவித்தும் ஊக்குவிக்கும் முகமாக கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் அதிபர் ஆசிரியர்கள் இவருக்கு பல வெகுமதிகளை கொடுத்தது மட்டுமன்றி ஸ்கந்தா அபிவிருத்திச்சபை தனது அவசரக் கூட்டத்தில் இம்மாணவனுக்கு அபிவிருத்தி நிதியிலிருந்து 1000 ரூபாவை அன்பளிப்பது என்றும் தீர்மானித்துள்ளது.

## இன்றைய பலன்

மாதம்: பங்குனி
திகதி: 13 (27-3-1987)
கிழமை: வெள்ளி
திதி: திரயோதசி
மு. இ. வரை
நக்ஷத்திரம்: சதயம்
மு. இ. வரை

மேடம்; பணமுடையினால் பெரிதும் வேதனைப்படுவீர்கள். மனப்போராட்டங்களும் அதிகரிக்கும். வழக்கு விவகாரங்களுக்கு இடமளியாது இருக்கவும்.

இடபம்: இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவர். சுப காரியம் ஒன்றும் இடம்பெறலாம். கல்வி முன்னேற்றமும் உண்டு.

மிதுனம்: வாழ்க்கையில் வசதிகள் பெருகும். பொதுப் பணிகளில் நாட்டம் தொழிற் சிறப்பு இவற்றுடன் பெரியோர் ஆதரவும் உண்டு.

கடகம்: அன்னியர் சகவாசம் சங்கடத்தில் மாட்டிவைக்கும். எதிரிகளின் சூழ்ச்சி மனநிம்மதியைக் குறைக்கும். அக்கினி ஆயுத பிணிக்கும் இடமுண்டு. அவதானம்.

சிங்கம்; அறவழியில் நாட்டம் பிறக்கும். குடும்பத்திலும் சுமுகமான நிலை தென்படும். எதிர்பார்த்த சுபகாரியம் ஒன்றுக்கும் வழிகோலப்படலாம்.

கன்னி: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள். வீண் பழிக்கும் இலக்காவீர்கள். முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையாக இருக்கவும்.

துலாம்: இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல். பிதாவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். வித்தையிலும் வெற்றிக்கு இடமுண்டு.

விருச்சிகம்: ஆராய்ச்சியாளர் பெருமையடைவர். தாராள சிந்தை மேலிடும். பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். தொழில் முயற்சியுமுண்டு.

தனுசு: வெற்றி உதமருகில் விரைந்து வரும். எதிர்பாராத வரவுகளுக்கும் இடமேற்படலாம். நினைத்த காரியசித்திக்கும் இடமுண்டு.

மகரம்: ஆமை வேகத்தில் காரியங்கள் நடைபெறும். கடமைகள் சீர்குலையும். வீண் நஷ்டத்திற்கும் இடமுண்டு.

கும்பம்: ஏமாற்றமான செய்தி கிடைக்கும். கல்வியில் மந்தநிலை காணும். தனியார் துறையில் கடமைபுரிவோர் அவதானம் வேண்டும்.

மீனம்: குடும்ப வாழ்க்கை இனிமை நிறைந்ததாக இருக்கும். மேலதிகாரிகளின் ஆதரவும் கிட்டும். காதலர்களுக்கு கன குஷியான தினம்.

திருமலை ரவீந்திரன்

### குரக்கன் தினை, பயறு

## பயிர்ச்செய்கை அவசியம்

பண்டத்தரிப்பு வியா

"இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் எமது விவசாயிகள் குரக்கன், பயறு, தினை ஆகிய உணவுப் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடவேண்டும். அத்தோடு தற்போது தக்காளிப்பழம் திராட்சைப் பழம் ஆகியன போக்குவரத்துக் கஷ்டங்களினால் இங்குதேங்கி மிகவும் மலிவு விலையில் கிடைக்கிறது. இதிலிருந்து தக்காளி ஜாம் திராட்சை ஜாம் ஆகியவற்றை உற்பத்திசெய்து வீட்டிலிருக்கும் இளம்பெண்கள் தங்கள் அன்றாட தேவைக்கு பயன்படுத்தவேண்டும்"

இவ்வாறு பண்டத்தரிப்பு விவசாய விரிவாக்க அலுவலர் திரு. வை. பாலகிருஷ்ணன் பண்டத்தரிப்பு வாழ்வொழி நிலைய விவசாய மனையியல் பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வாழ்வொளி நிலைய அதிபர் அன்னை யூலாலி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் மனையியல் போதனாசிரியை திருமதி எஸ். சண்முகநாதன் நிலைய மாணவிகளுக்கு தக்காளிப் பழத்திலிருந்தும் திராட்சைப் பழத்திலிருந்தும் ஜாம் தயாரிக்கும் முறைபற்றி செய்முறைப் பயிற்சியை வழங்கினார்.

### பல்கலைக்கழக அனுமதிக்கு தெரிவான

## மருத்துவ, பொறியியல்பீட மாணவர் பெறவேண்டிய புள்ளிகள்

(கொழும்பு, வியா.

1987ம் கல்வி ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கு தெரிவான மருத்துவபீட, பொறியியல்பீட மாணவர்கள் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகளின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. இத்துடன் ஏனைய விபரங்களும் கீழே தரப்பட்டுள்ளது.

மருத்துவ பீடம் (புள்ளிகள்) கொழும்பு-280, யாழ்ப்பாணம் -277, மட்டக்களப்பு-251, மன்னார்-221, முல்லைத்தீவு-206, கிளிநொச்சி-191.

பொறியியல்பீடம் (புள்ளிகள்) யாழ்ப்பாணம் - 272, கொழும்பு-266 ஏனைய பீடங்களினதும், பிரிவுகளினதும், மாவட்ட ரீதியில் பெற்றிருக்க வேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் விபரம் விரைவில் அறிவிக்கப்படவுள்ளன.

கடந்தவருடம் ஆகஸ்ட் மாதம் க. பொ. த. (உ. த.) பரீட்சைக்கு தோற்றியவர்கள் 1. 1υ, 000 பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதிபெற்றவர்கள்-26, υ84, அனுமதிபெற்றவர்களில் விண்ணப்பித்தவர்கள்-16, 700 இவர்களில் பல்கலைக்கழக அனுமதிபெறுவோர் 6, 295. இம்முறை பல்கலைக்கழக அனுமதிக்காக தகுதிபெற்று விண்ணப்பித்தோரில் பத்து வீதமானோர் போலியான தவறான தகவல்களை கொடுத்துள்ளனர்.

அனுமதிபெறும் 6, 295மாணவர்களும் தெரிவுசெய்யப்படும் பீடவிபரம் வருமாறு:

கலைப்பீடம்-1, 800, பௌதிக விஞ்ஞானம்-960, உயிரியல் விஞ்ஞானம் 725, வர்த்தகம் -600, பொறியியல்-58υ, மருத்துவம்-520, முகாமைத்துவம்-430, விவசாயம்-305, சட்டம்-200, பல்வைத்தியம்-75, மிருகவியல்-50, கட்டிடக்கலை-40.

சகலபீட தெரிவுகளும் அகில இலங்கை புள்ளி அடிப்படையில்-30வீதமும்,மாவட்டசனத்தொகைஅடிப்படையில்60 வீதமும் பின்தங்கிய மாவட்டம் (மன்னார், முல்லைத்தீவு, அம்பாறை, பதுளை, அம்பாந்தோட்டை) ரீதியில் -5வீதமும் என கணிக்கப்படும். (சி)

## கிராமத்துக்கு பெயர்மாற்றம்

[காரைநகர் நிருபர்]

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க பிரிவில் எழுச்சி கிராமமாக தெரிவுசெய்யப்பட்ட காரைநகர் மாதடை கிராமம் 'மதுரபுரம்' என புதிய பெயரில் அழைக்கப்படுமென உதவி அரசாங்க அதிபர் திரு. கா. சீவரட்னம் தெரிவித்துள்ளார்.

### இராணுவ சேவை

# 12லிருந்து 22 வருடங்களாக அதிகரிக்க சட்டமூலம்

(கொழும்பு)

1950ம் ஆண்டின் இராணுவ வீரர்கள் சேவைச் சட்டததில் திருத்தம் கொண்டு வருவதற்காக ஜனாதிபதி ஜயவர்த்தன தெரிவித்த ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கும் இத்திருத்தச் சட்டத்தின் மூலம் இராணுவ சேவையில் ஈடுபடுவதற்கான காலம் 12 ஆண்டுகளிலிருந்து 22 ஆண்டுகளாக அதிகரிக்கப்படவுள்ளது.

இதில் 12 ஆண்டுகள் நிரந்தர இராணுவ சேவையிலும் 10 ஆண்டுகள் றிசேர்வ் படை சேவையிலும் கடமையாற்ற வேண்டும்.

தற்போதைய சட்டத்தின்படி 12 ஆண்டுகள் கடடாய சேவையில் முதல் 5ஆண்டுகளை நிரந்தர சேவையிலும் மற்றும் 7 ஆண்டுகளை றிசேர்வ் படை சேவையிலும் அளிக்க வேண்டும்.

இச்சேவைக்காலம் 5 ஆண்டுகளாக இருப்பதனால் பெருமளவு விரயம் ஏற்படுவதும் படை அமைப்பில் சமநிலை சீர்குலைவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐந்தாண்டுகளின் பின் படை வீரர் சேவையிலிருந்து விலகினால் தற்போது இராணுவ பயிற்சிக்காக செலவிடப்படும் பாரிய முதலீடு போதியளவு பயனைத் தரமாட்டாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (...)

## முல்லைத்தீவு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எட்டுச் சடலங்கள் இருந்ததாகவும் இவை துர்நாற்றம் வீசியதால் அடக்கம் செய்ததாகவும் அவற்றுடன் தவறுதலாக இச் சடலமும் அடக்கம் செய்யப்பட்டு விட்டதாகவும் தெரிவித்தார்.

இம்மரணம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பஸ் சாரதி, நடத்துநர் ஆகியோரை விசாரணை செய்த பதில் நீதவான் பகிரங்க தீர்ப்பு வழங்கினர்.

## மனித குலத்தின்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு பேரிழப்பாகும்".

இவ்வாறு காலம் சென்ற இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் திரு. பொன். குமாரசாமியின் மரணம் தொடர்பாக முன்னாள் நியமன எம். பி. திரு எம். ஸி. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- மனிதர்கள் தமது வாழ்வினைப் புனித இலட்சியங்களுடன் ஆரம்பிக்கின்றனர் ஆயினும் சிலர் தமது இலட்சியங்களைக் காலப் போக்கில் தாமே அலட்சியப் படுத்துகின்றனர். எனினும் சிலர் தாம் கொண்ட இலட்சியத்திற்காக இறுதி மூச்சு வரை உழைக்கின்றனர். அத்தகையோரில் தோழர் பொன் குமாரசாமியும் திகழ்வார். [வா]

# புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம்.வெள்ளி வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் கூடிய போது தெரிவான புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் விபரம்:-

தலைவர் கே.குகதாசன், உப தலைவர்கள் எஸ். செல்வநேசன், கே. சிறிபாலன், செயலாளர் எஸ். தில்லைநடேசன், உப செயலாளர் என். தவராஜா, பொருளாளர் ரி. வ(?)ஜன், பத்திராதிபர் எம். முருகானந்தன், கணக்குப் பரிசோதகர் வி. சிறிகாந்தா, ஏ. சத்தியானந்தம்.

மற்றும் துடுப்பெடுத்தாட்டம்,உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், எல்லே, தாச்சி, ஆகிய விளையாட்டுகளுக்கும் தலைவர்கள் தெரிவாகினர்.

0 0 0

யாழ்ப்பாணம்,வெள்ளி ஈச்சமோட்டை அருள்மிகு ஸ்ரீஞான வைரவர் தேவஸ்தான பரிபாலன சபையின் 36 வது பொதுக்கூட்டம் திரு.த. தியாகராசா தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர் த.தியாகராசா, உப தலைவர் ந. சண்முகநாதன், செயலாளர் து. கமலநாதன், உப செயலாளர்ச. தவசீலன், பொருளாளர் வ. க. சின்னத்துரை, கணக்காய்வாளர் க. சபாநாதன் மற்றும் இருவர் நிர்வாக சபைஉறுப்பினர்களாகத் தெரிவு செய்ப்பட்டார்கள். (வா)

0 0

யாழ்ப்பாணம்,வெள்ளி செட்டிபுலம் சனசமூக நிலைய நடப்பு வருடாந்த உத்தியோகத்தராக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் க. மார்க்கண்டு,உப தலைவர் க.ஆனந்தராசா,செயலாளர் வே. நகுேந்திரன்,உப செயலாளர்ந.மோகனராஜன், பொருளாளர் ஆ. சடாச்சரம், பத்துப் பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

00 00

சங்கானை மாவடி சனசமூக நிலைய வருடாந்தப் பொது கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பாண்டுக்கான உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் பொ.பரராசசிங்கம் உப தலைவர் க.சடாச்சரம், செயலாளர் வ.இந்திரன்,உப செயலாளர் வ. கிருஷ்ணதாசன், பொருளாளர் க.ஸ்கந்தராசா, உபபொருளாளர் த. பாலசுப்பிரமணியம், போஷகர் த.கோவிந்தசாமி, மற்றும் 6 பேர் நிர்வாகசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதோடு மாவடிக் கல்வி நிலையத்திற்கான பொறுப்பாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (அராலி நிரு.)

0 0

சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற பொழுது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செல்யப்பட்டனர்.

தலைவர் சு தர்மசீலன், உப தலைவர்கள் நா.கந்தையா, ச. கந்தசாமி, செயலாளர் செ. இரத்தினம், உப செயலாளர் நா. துரைச்சாமி, பொருளாளர் க.இராசரத்தினம் 9 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0

வல்வெட்டித்துறை ஓய்வூதியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாக சபைக்குத் தெரிவானார்கள்.

அதன் தலைவர் ச. சக்திவேல், செயலாளர் தி.வேலுபிள்ளை, பொருளாளர் ந.பாலசுப்பிரமணியம் 5 பேர் சங்க உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (வல்.நிரு.)

00 00

உடுவில் தெற்கு சத்தியபுரம் திருச்சபையின் வருடாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் வண. டி.சி.இரட்ணசிங்கம், திருமதி எ.ஆர்.தம்பியப்பா, செயலாளர் சு.பிரான்ஸிஸ், உபசெயலாளர் திருமதி சீவரட்ணம், பொருளாளர் எம். வி. எஸ். இராசதுரை, வாலிபர் சங்கப் பிரதிநிதிகள் டேவிட் மதியாபரணம், டிக்கன் திருமதி மாரிமுத்து, திரு. அ. அருளானந்தம், திருமதி துரைசிங்கம்- (உடுவில் நிரு.)

## மானிப்பாய் மருதடி விநாயகர் உற்சவ ஏற்பாடு

பண்டத்தரிப்பு, வியாழன் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29 ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்த மாதம் 14.ம் திகதி புதுவருடப்பிறப்பு தினத்தன்று ரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. இந்த உற்சவ ஒழுங்குகள் தொடர்பாக கடந்தவாரம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கூட்டமொன்று நடைபெற்றது. சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் முதலுதவிச் சிகிச்சை முகாம் இவ்வருடம் வழமைபோல ஆலயவீதியில் இயங்கும் என்றும், இப்படையின் தொண்டர்கள் வீதி ஒழுங்கு, பாதுகாப்பு ஆகிய பணிகளிலும் ஈடுபடுவார்கள் என்றும் படையின் வடபிரதேச ஆணையாளர் வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னுசித்தம்பி இதுபற்றி தெரிவித்தார்.

## ஷெல் தாக்குதல்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சனசமூக நிலைய சுற்றுடலில் உள்ள வி. செல்வவினயகம் சிவகுரு, பொன்னம்பலம், சங்கீத ஆசிரியர் நடராசா ஆகியோரின் வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளாகின. மற்றும் சில வீடுகள் சிறு சேதமடைந்துள்ளன,

மகாலிங்கம் இரத்தினவதி [வயது 30] என்பவர் பலத்த காயங்களுடன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வா)

## பருத்தித்துறையில் எரிபொருள், பொருளாதாரத் தடையைக் கண்டித்து ஊர்வலம்

### பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்

(பருத்தித்துறை நிருபர்)

பருத்தித்துறையில் அரசாங்கத்தின் எரிபொருள் தடை, பொருளாதாரத் தடைகளைக் கண்டித்தும், எரிபொருள் பத்திரங்களை இராணுவ முகாமில் விநியோகிப்பதை எதிர்த்தும் ஆர்ப்பாட்ட. ஊர்வலமொன்றைக் கடந்த செவ்வாயன்று நடத்திய பருத்தித்துறைப் பகுதிப் பொதுமக்கள் பருத்தித்துறைஉதவி அரசாங்க அதிபரிடம்மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கு முன்னுலுள்ள மருதடி விநாயகராலய முன்றலில் ஆரம்பமான இவ்வார்ப்பாட்ட ஊர்வலத்தில் ஆண்கள் பெண்கள் உட்பட பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் பெண்களே கூடுதலாகக் காணப்பட்டனர் ஊர்வலம் பருத்தித்துறை பிரதான வீதியூடாகக் கிராமக்கோட்டடி, சாரையடி புலோலிச் சந்தியை அடைந்து பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையை அடைந்தது.

''எரிபொருள் தடை நீக்கம் மாயமான் திட்டம்''

சர்வ தேசத்தையும் ஏமாற்றி எரிபொருள் தடைநீக்கம் என்ற போர்வையா?''

''தமிழினத்தை வாழவிடு''

''அடக்குமுறைக்கு அடிபணியோம்''

போன்ற சுலோகங்களைத் தாங்கிய ஊர்வலத்தினர் ஆர்ப்பாட்டத்துடன் சென்றுகொண்டிருந்தனர்.

உதவி அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரை உதவி அரச அதிபர் யாழ். அரச அதிபரிடம் கையளிப்பதாக ஊர்வலத்தினருக்கு உறுதியளித்தார்.

இறுதியில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் ஊர்வலத்தினர் மத்தியில் பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. எஸ். கதிரேசு. அகதிகள் புனர்வாழ்வுச் சபைத் தலைவர் திரு. என்.குணசீலன் ஆகியோரும் உரையாற்றினர். (ஊ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் வெள்ளி உடுப்பிட்டிஅருள்மிகு சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோவில்பொதுக்கூட்டம்நாளை நாளை மறுதினம் ஞாயிறுமாலை கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது.

கோவில் பொதுச் சபையின் தலைவர் திரு.வை.மகாதேவன் தலைமையில நடைபெறும் இக்கூட்டத்தில் 'ஆலய வழிபாடு' 'ஆலயமும் மக்களும்' என்னும் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெறுகின்றன.

## நியமனம்

பருத்தித்துறை, வியாழன் பருத்தித்துறை கொத்தணி உப-அதிபராக பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய அதிபர் திரு. என். அனந்தராஜனும். செயலாளராக கற்கோவளம் மெ. மி. த. க. பாடசாலை அதிபர் திரு. எஸ். கருணநிதியும், பொருளாளராக தும்பளை சைப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். சிவஞானசுந்தரமும் தெரிவாகியுள்ளனர். பருத்தித்துறை கொத்தணி அதிபராக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. எஸ. பி. பாலசிங்கம். நியமிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

## சேமமடு செல்வார்கள்

வவனியா, வியாழன் வவனியா மாவட்டத்தினைச் சேர்ந்த சகல திணைக்கள உயர் அதிகாரிகளும் ஏப்ரல் முதல் வாரத்தில் சேமமடுவிற்கு விஜயம் செய்யவுள்ளனர் என தெரிய வருகிறது.

## தேசிய அபிவிருத்தியில் கல்வி மூலம் இளைஞர் பங்களிப்பு அவசியம்

யாழ்ப்பாணம், வெள்ளி ''பொருளாதார விருத்திக்கும் கல்விமுறைக்கும் மிக நெருங்கியதொடர்பு அவசியமாகும். கல்வித் திட்டம் தொழில் நோக்குடையதாக அமையவேண்டும் என்ற கருவலுவுற்றுள்ளது. கல்வியாளர்களும் சமுகவிஞ்ஞானிகளும் இக்கருவை ஏற்றுள்ள தோடுவற்புறுத்திவருகின்றனர். தேசிய விருத்தியில் கல்வி மூலம் இளைஞர்களின் முழுமையானபங்களிப்பும் ஒத்துழைப்பும் ஒருமுகப்படுத்தப்படுவது அவசிய தேவையாகும்'' என்று கோப்பாய் கொத்தணி பாடசாலைகள் அதிபர் பூ. க. இராசரத்தினம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் தொழில்நுட்பப் பகுதியின் பரிசளிப்பு விழாத் தலைமையுரையில் கூறியுள்ளார்.

இப்பரிசளிப்புவிழா கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. விழாவின் பிரதம அதிதியாக தொழில் நுட்பப்பிரிவு கல்விஅதிகாரி திரு. ச. சும்பிரமணியம் கலந்து கொண்டார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஐந்து துறைகளிலான தொழில்நுட்பப் பயிற்சிகளை பூர்த்திசெய்த மாணவ மாணவிகளுக்குத் தலைமைப்பத்திரங்களை பிரதம அதிதி வழங்கினார். மாணவமாணவிகள் சார்பில் செல்வன் இ. இராஜகுகேந்திரன் உரையாற்றினர்.

## இறுதிப் போட்டிக்கு தெரிவு

காரைநகர், வியாழன் ஊர்காவற்றுறை உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப்போட்டியி விளையாட காரை விளையாட்டுக்கழகமும், கோவளம் விளையாட்டுக் கழகமும் தெரிவாகியுள்ளன.

காரை விளையாட்டுக் கழகம் ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை ஒரு கோலாலும் கோவளம் விளையாட்டுக் கழகம் தம்பாட்டி விளையாட்டுக் கழகத்தை ஒரு கோலாலும் வெற்றி பெற்று இவ்விறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன. போட்டிகளுக்கு திரு. ரி. சிவகுமாரன், திரு என். இராமநாதர் ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றினர்.

## வெள்ளிச் சிந்தனை

### பெருந்திருவிழா

விழா என்றால் கொண்டாட்டம், மங்கலமான- குதூகலமான நிகழ்ச்சியாகும். திருவிழா என்றால் தெய்வீகமான கொண்டாட்டம் தெய்வீகமான மங்கல நிகழ்ச்சியென்று விளங்கிக்கொள்ளலாம். தெய்வீகமான மங்கலமான கொண்டாட்டங்கள் எல்லாவற்றிலும் மேலானதும் பெருமை வாய்ந்ததுமான நிகழ்ச்சியே பெருந்திருவிழாவாகும் பெருந்திருவிழா என்னும் இன்பத் தமிழ்ச் சொல்லுக்குப் பொருத்தமான வடமொழிச் சொல்லே மகோற்சவம் என்பதாகும். சைவசமய ஆலயங்களிலே நடைபெறும் பெருந்திருவிழாக்களுக்கு ஒருவகையான கருத்தும் விளக்கமும் மேலான பஞ்சகிருத்தியம் என்று செல்வார்கள். பரமபதியாகிய சிவபெருமான் நம்போன்ற சகல உயிர்களின் நன்மை கருதியும் தனக்கென ஒரு பிரயோசனமும் கருதாமலும் இடையறுது நிகழ்த்தும் ஐந்தொழில்களை நமக்கு உணர்த்துவதாகவும் இவ்வைந்தொழில்களின் பயனையும் நாம் அடைய வழிவகுப்பனவாகவும் நம் சைவசமயக் கோவில்கள் பலவற்றில் வருடம் தோறும் கொடியேற்றம் வேட்டை, தேர், தீர்த்தம் முதலிய தெய்வசாந்நித்தியத்தை உணரச் செய்யும் புனித நிகழ்ச்சிகளுடன் பெருந்திருவிழாக்கள் நடாத்தப்படுகின்றன.

ஒரு வைத்தியசாலை அச்சூழலில் உள்ள மக்களுக்குப் பயன்படவேண்டுமானுல் அவ்வைத்தியசாலையில் சிறந்த வைத்தியர், மருந்துகள், வைத்தியம் செய்வதற்குரிய உபகரணங்கள் என்பன குறைவற அமையவேண்டும். இவைகளெல்லாம் சரிவர அமைந்திருந்தாலும் நோயாளிகள் அங்கு சென்று வைத்தியம்செய்ய முற்படாதிருந்தால் வைத்தியசாலையால் வைத்தியசாலையில் உள்ள வைத்தியர் முதலியவற்றுல் ஒருபயனும் ஏற்படாமல் வீணுவதோடு நோயாளிகளும்நோயினுல் துன்புறும்நிலை நீடிக்கும்.

இதேபோல ஆலயங்களில் நடைபெறும் பெருவிழாக்களின் போது குருக்கள் விழாவுக்குத்தேவைப்படும் பொருட்கள் என்பன தகுதியாயும் போதுமானதாயும் அமைவதோடு அவ்விழாக்கள் எல்லாவற்றிலும் அவ்வாலயத்தில் வழிபடுவோர் தவருமலும் நியமமாகவும் அக்கறையுடனும் பங்குபற்றுவது அவசியமாகும். திருவிழா காலங்களில் அபிஷேகம், நிவேதனம் அலங்காரம் என்பன விதிப்படி அமைவதோடு பூசகர்கள் வழிபடுவோர் உபயகாரர் என்போர் அனைவரும் ஆசாரமும் ஆர்வமும் மிக்கவராய் இருத்தல் வேண்டும். இவைபோல திருவிழாக்காலங்களில் முதலாவதாக இறைவன் அடியார்க்கும் ஆலயத்தொண்டர் ஏழைகள் ஊனமுற்ரேர்களுக்கும் தானதர்மம் செய்தல், திடுத்திப்படுத்தல் என்பனவும் அவசியமாகும்.

மண்ணிற் பிறந்தார் பெறும்
பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை
அமுதுசெய்வித்தல்
கண்ணினல் அவர் நலவிழாப்
பொலிவுகண்டார்தல்
உண்மையாமெனில் உலகம்
முன்வருகென உரைத்தார்.

பெரியபுராணம்

— அருளானந்

பிரயாண ஒழுங்கு

★ Canada

★ Australia ★ Germany

★ France ★ Italy

★ குறிப்பாக France, Germany, Italy ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் வெகுசீக்கிரத்தில் அழைத்துச் செல்ல உள்ளார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் [BOND], விசா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

எமக்கு வேறுகிளைகள் கிடையாது. எ-3588

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 27-3-87

# திருமலை ஆலங்கேணியில் படையினர் தேடுதல் வேட்டை
## 7 பேர் சுட்டுக் கொலை பலர்கைது

[திருமலை நிருபர்]

திருகோணமலை மாவட்டத்தில் ஆலங்கேணிப்பகுதியில் கடந்த சில தினங்களாக தேடுதல் நடாத்திய இராணுவத்தினர் அப்பாவித் தமிழர்கள் ஏழு பேரை சுட்டுக் கொன்றதுடன் பலரையும் கைது செய்து பலத்த விசாரணையின் பின் விடுவித்தனர்.

இப்பகுதியில் தேடுதல வேட்டையில் இறங்கியிருந்த ஐந்நூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வீடுவீடாக சென்று நடாத்திய தேடுதலின் போதே இந்த ஏழு தமிழர்களும் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் வீடுகளையும் சேதமாக்கிய இராணுவம் பலரையும் கைது செய்து முகாம் கொண்டு சென்று பலத்த விசாரணை நடாத்திய பின் விடுதலை செய்தது.

இத்தேடுதல் நடவடிக்கையில் கொல்லப்பட்டவர்களின் பெயர் விபரம்; ஆர். விஜயகுமார் (வயது 15), கே. நாகசேகரன் (வயது 15) என். ஹரிச்சந்திரன் (வயது 17) எஸ்.நேசன் (வயது 22), கே. கிருஷ்ணசேகரம் (வயது 25), எம். வீரசிங்கம் வயது 45) பி. பொன்னம்பலம்(வயது 65)

கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டோர்களில் இருவர் பற்றிய தகவல் இது வரையில் தெரியவில்லை.

# குரும்பசிட்டியில் இராணுவம் - புலிகள்
## கடும்சமர் படையினர் பலர் பலி
### பல வீடுகள், பாடசாலைகள், ஆலயம் சேதம்

(பலாலி நிருபர்)

வசாவிளான் இராணுவ முகாமிலிருந்து குரும்பசிட்டிப் பக்கமாக மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி நேற்றுக் காலை 5-30 மணியளவில் முன்னேறமுற்பட்ட சுமார் 200-க்கு மேற்பட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட பலத்த மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். விடுதலைப்புலிகளின் போராளி ஒருவரும் மரணமானர்.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது:-

வெளியேவர முற்பட்ட இராணுவத்தினருக்கு உதவியாக இரு ஹெலிகாப்டர்கள் வானத்தில் பறந்து மக்கள் வாழும் பகுதிகளை நோக்கிச் சுட்டதுடன், 'ஷெல்' தாக்குதலையும் நடத்தின. 'சீ'பிளேன் ஒன்று போராளிகளின் நடமாட்டத்தை வானத்தில் பறந்து நோட்டமிட்டது.

ஹெலிகாப்டரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினல் ஏழாலை வடக்கு, குரும்பசிட்டி, குப்பிழான் பகுதிகளிலுள்ள பல வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன மேலும்பி. ப. 3-00 மணியளவில் வானத்தில் பறந்து தாக்குதல் நடத்திய ஹெலிகள் மல்லாகம், தெல்லிப்பளை, கட்டுவன் ஆகிய பகுதிகளிலும் தாக்குதல்களை மேற்கொண்டன. இத்தாக்குதலினல் இப்பகுதிகளிலுள்ள பல வீடுகள், கடைகள் ஆலயங்கள், பாடசாலைகள் பலத்த சேதத்திற்குள்ளாயின' இத் தாக்குதல் சம்பவத்தினல் இப்பகுதிகளிலுள்ள பாடசாலைகள் நேற்று நடைபெறவில்லை.

ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எரிகுண்டுத் தாக்குதலிலும் குரும்பசிட்டிப் பகுதியிலுள்ள பல வீடுகள் சேதமடைந்துள்ளன. சுமார் 9 மணித்தியாலங்களாக இடம் பெற்ற இப் பலத்த மோதலில் இராணுவ தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. புலிகளின் கடும் தாக்குதலை சமாளிக்க முடியாத படையினர் தமது இழப்புகளுடன் பி. ப 3 30 மணியளவில் முகாம் திரும்பினர்

இச் சம்பவம் பற்றி விடுதலைப புலிகள் தகவல் தருகையில்; இம் மோதலின்போது இராணுவ தரப்பில் பலர் இறந்துள்ளதாகவும், இராணுவத்தினரிடமிருந்து பல ஆயுதங்களை நாம் கைப்பற்றியதாகவும் தெரிவித்தனர். நமது தரப்பில் புங்குடுதீவைச் சேர்ந்த மனே) மனேரஞ்சன் வீரமரணமடைந்ததாகவும் ஏனைய இரு போராளிகள் காயமடைந்ததாகவும் மேலும் தெரிவிததனர். எவ். என். சி. ரைபிள் ஒன்று, அதற்குரிய 5. 56 ரக ரவைகள் 1000, பல ஹெல்மட்டுகள், பயளற்ஸ், இராணுவ உபகரணங்கள் ஆகியவை தம்மால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

# "அப்பாவித்தமிழ் மக்கள் மீதான
## கண்மூடித்தனமான தாக்குதலை இலங்கை உடன் நிறுத்த வேண்டும்"

புதுடில்லி மார்ச், 26

"இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள் எனவே அப்பாவி தமிழ்மக்கள் மீதானகண்மூடித் தனமான தாக்குதலை இலங்கை அரசு உடன் நிறுத்த வேண்டும்''

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை இந்தியலோகதளம் கட்சியின் இளைஞர் அணி இன்று புதுடில்லியில் இலங்கைக்கான இந்திய தூதர் திரு. பேர்னுட் திலகரத்தினவிடம் கையளித்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் இலங்கையில் மதசார்பற்ற அரசியல் அமைப்பொன்று உருவாக வேண்டும், என்றும் கோரிக்கை விடுத்துள்ளது. (எ)

### வெளிநாட்டு கூலிப்படைகளின் உதவியுடன்
# இலங்கை அரசு தமிழரை அழித்தொழிக்கின்றது
### – அமைச்சர் இராமச்சந்திரன்

சென்னை மார்ச் 26

'அப்பாவித் தமிழர்களை இலங்கை அரசு சுட்டுக்கொல்வதுடன் வெளிநாட்டுக் கூலிப் படைகளின் உதவிகளையும் நாடி அவர்களை இல்லாது ஒழிக்கின்றது''

இவ்வாறு தமிழ்நாடு உணவு அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் இன்று தமிழகச் சட்டப் பேரவையில் இலங்கை விவகாரம் குறித்து பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் தமதுரையில்: இந்தியா வந்துசேர்ந்த தமிழ் அகதிகளை மீண்டும் திருப்பி அழைத்துக் கொள்ளும் எண்ணம் இலங்கை அரசுக்குக் கிடையாது. இதுவரை இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு சுமார் ஒன்பது கோடியே முப்பதி லட்சம் ரூபாவை தமிழக அரசு செலவிட்டுள்ளது என்ருர்.

இலங்கை அதிகளுக்காகதமிழ் நாட்டில் தற்போது நான்கு நிரந்தர முகாங்களும் 172 தற்காலிக முகாங்களும் இயங்குகின்றன என்று கூறிய அமைச்சர் இதற்கான அனைத்துச்செலவுகளையும் தற்போது மத்திய அரசே ஏற்றுக் கொள்கிறது என்றும் கூறினர். (எ)

## பலாலி, வசாவிளான் முகாம்களிலிருந்து 'ஷெல்' தாக்குதல்; ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர் பலி

யாழ்ப்பாணம், வெள்ளி

வசாவிளான், பலாலி இராணுவ முகாமிருந்து நேற்று அதிகாலை 1 மணியிலிருந்து தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதலில் ஒரே வீட்டைச் சேர்ந்த ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயப்பட்டுள்ளனர்- பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் நாசமாக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் குரும்பசிட்டியைச் சேர்ந்த தர்மர் கந்தையா (வயது 54) கந்தையா சோமசுந்தரம் (வயது 50), அன்னமுத்து கந்தையா (வயது 70) ஆகியோர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அம்பிகாதேவி கந்தையா (வயது 15] லோகாம்பிகை வாமதேவன் [வயது 32] ஆகிய இருபெண்களும் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவசர சத்திர சிகிச்சையின் பின் மரணமானர்கள். இவர்களது வீடும் முற்ருகச் சேதமடைந்து விட்டது,

அளவெட்டி தெற்கில் அதிகாலை மூன்று மணியளவில் தாக்குதல் இடம்பெற்றது. அப்போது உறக்கத்திலிருந்த மக்கள் அனைவரும் எழுந்து ஓடிச்சென்று பாதுகாப்பிற்காக தெருவில் உள்ள மதகுகளிற் குவ் பதுங்கிக் கொண்டனர். அந்நேரம் வீடுகளில் தங்கி நின் சிலருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது, இவர்களில் நல்ல தம்பி இராசையா (வயது 63) இளையதம்பி இராசை (வயது 46) ஆகிய இருவரும் படுகாய முற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களது வீடுகளும் லத்த [illegible]சமடைந்துள்ளன

சுன்னுகம் [illegible]யிலயம்பதி இளையகுட்டி தர்மரூபன் (வயது 17) என்பவரும் படுகாய முற்று யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாகியட்பிட்டியில் செல்லரின் வீடு உட்பட மூன்று வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளாயின, (ெ)

## பருத்தித்துறையில் இராணுவம்
# 'ஷெல்', பீரங்கி தாக்குதல் 4இளைஞர்காயம்வீடுகள்சேதம்

பருத்தித்துறை, நிருபர்.

பருத்தித்துறை இராணுவத்தினர் நேற்று முன்தினம் அதிகாலை மோட்டார் ஷெல் தாக்குதல்களையும், கடற் பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டதில் நான்கு இளைஞர்கள் காயமடைந்தனர். ஐந்து வீடுகள் பலத்த சேதமடைந்தன.

நேற்று முன்தினம் அதிகாலையில் ஆரம்பமான இத்தாக்குதல்களினல் பருத்தித்துறைப் பகுதிமக்கள் பெரும்பீதியடைந்தனர். பல இடங்களில் குண்டுகள் விழுந்து வெடித்தன.

தாக்குதல்களின் போதுகாயமடைந்த பருத்தித்துறையை சேர்ந்த நான்கு இளைஞர்களும் மந்திகை அரசினர் வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்டனர். இருவர் உடனடியாக யாழ். பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் விபரம்: தாம்போதி தில்லைநாதன் (வயது 22) பருத்தித்துறை, கே.சாந்தகுமார் (வயது 20). (சி)

## இந்தியாவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை இனப்பிரச்னை குறித்து இன்று விரிவாக பேச்சுநடத்தவுள்ளார்.

இதேவேளை இந்திய இணை அமைச்சர்களான திரு. கே. நட்வர்சிங்கும் திரு. பிசிதம்பரமும் சென்னையில் நேற்று தொடர்ச்சியான பேச்சுக்களை மேற்கொண்டார்கள்,

மேலும் இனப் பிரச்னைக்கு அரசியல் ரீதியில் அமைதியான நிரந்தர தீர்வுகாண இலங்கை ஒத்துழைப்ப வழங்குமென்று தாம் எதிர்பார்ப்பதாக இந்திய பிரதமர் திரு. ராஜீவ்காந்தி தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க ஜனதிபதி ஜெயவர்த்தன இலங்கை விவகாரத்தில் இந்தியா தொடர்ந்தும் மத்தியஸ்த நிலையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று திரு. டிக்ஸிட்ருடனை சந்திப்புக்களின் போது கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

## மூவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டப் பேரணி காங்கேசன் துறை வீதி வழியாக சிவன் கோவில் சந்திக்குச் சென்று பின் அங்கிருந்து கன்னதிட்டி கஸ்தூரியார் வீதிவழியாக வின்ஸர் தியேட்டர் சந்தியை அடைந்து அங்கிருந்து ஸ்ரான்லி வீதி, பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி வழியாக யாழ். கச்சேரியைச் சென்றடைந்தது.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் ஈழவர் முன்னணி மாதர்கள், சுலோக அட்டைகளைத்தாங்கிக் கோஷங்களை எழுப்பிய வண்ணம் சென்றனர்.

பேரணியில் சிறுவர் முதல் பெரியோர்வரை ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொண்டார்கள். பேரணியில் கலந்து கொண்ட சில தாய்மார்கள் தங்கள் பால் மணம்மாருத பச்சிளம் பாலகர்களையும் எரியும் வெய்யிலையும் பொருப்படுத்தாது தோளில் சுமந்தவாறு சென்றனர்.

பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு பொது மக்களும் வர்த்தகர்களும் தாகசாந்தி செய்தும், வீதிகளுக்கு நீரும் ஊற்றி இருந்தனர்.

சுமார் ஒரு மைல் வரை நீளமான இந்தப் பேரணியில் எழுப்பப்பட்ட கோஷங்கள் வருமாறு;

★ அடக்குமுறையை எதிர்ப்போம் உரிமைப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

★ மலையகம் விழிக்கும்; எரிமலை வெடிக்கும்.

★ இஸ்லாமியரை பிரிக்காதே ஈழவரைச்சிதைக்காதே.

★ லலித்துக்குக் கொண்டாட்டம், மனித உரிமைக்குத் திண்டாட்டம்.

★ புத்தரின் தத்துவம் எங்கே? இனப்படுகொலை நடப்பது இங்கே.

★ தொண்டாவிற்குக் கொண்டாட்டம், தொழிலாளருக்குத் திண்டாட்டம்.

(வா)

## மரண அறிவித்தல்

### மனுவல் யோசேப்பு (விசுவாசம்)

அரசாங்க கட்டிட ஒப்பந்தகாரர் மனுவல் யோசேப்பு காலமானர். இவர் காலம் சென்ற அன்னம்மாவின் அன்புக்கணவரும் சதானந்தன், அன்ரனி சிறில், விக்ரர், மேரிமெக்டலீன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக 27 - 3 - 87 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு 38/1 பழைய பூங்கா வீதியில இருக்கும் அன்னரின் இல்லத்திலிருந்து பரிசுத்தகொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: யோ. சதானந்தன். (சி-8240)

### ஜோசபின் பொன்மலர்

சுன்னுகம் சூராவத்தையைச் சேர்ந்த திருமதி ஜோசபின் பொன்மலர் ஜோசப் ஓய்வுபெற்ற ஆசிரியை (நல்லாயன் கன்னியர்மடம் கொட்டாஞ்சேனை) காலமாகிவிட்டார். இவர் திரு. ஜோசப் ஓய்வுபெற்ற பொது முகாமையாளர் (Ceylon Ocean Lines Ltd.) அவர்களின் அன்பு மனைவியும் ஜரீனியஸ் யூஜினி (லண்டன்) றெஜினி, ஜோவாணி (மட்ருஸ்), ஆகியோரின் அருமைத்தாயாரும், ஜெரலட் (லண்டன்) அன்பு மாமியாரும் தோமஸ் (உரிமையாளர் Aero Electrical Industries) பாக்கியநாதர் (ஓய்வு பெற்ற இ போ. ச. பரிசோதகர்) சோதிமலர், ராணியின்அன்புச்சகோதரியுமாவார். மரியதாசன், ஜோண் (முகாமையாளர் இலங்கை வங்கி அம்பாறை) ஆகியோரின் மைத்துனியுமாவார். மரணச்சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். குமாரசுவாமிப்புலவர் வீதி, சுன்னுகம். தகவல்: R. E. Joseph, 26.3.87. [சி8239

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389 — 24126.